பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 23 ஞாயிற்றுக்கிழமை 08.09.2024 கதிர் 305

## இனி இது ரகசியம் அல்ல!

தமிழ்மக்களின் விருப்பங்களை, வேணவாக்களை, அரசியல் எதிர்பார்ப்புக்களை தெற்கு அரசியல்வாதிகளுக்கும் சிங்கள மக்களுக்கும் இந்த உலகத்திற்கும் ☞ 2

## தமிழ் சிவில் சமூக அமையம் அரியநேத்திரனுக்கு ஆதரவு

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பால் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தப்பட்டுள்ள தமிழ் பொது வேட்பாளர் அரியநேத்திரனை ஆதரிப்பதாக தமிழ் சிவில் சமூக அமையம் அறிவித்துள்ளது.

தமிழ் சிவில் சமூக அமையத்தின் இணைப் பேச்சாளர்களான அருட்பணி வீ. யோகேஸ்வரன், பொ.ந.சிங்கம் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் தேசிய அரசியல் அபிலாசைகளைக் கூட்டாகப்பிரகடனம்செய்ய, தமிழ்ப்பொதுவேட்பாளர் பாக்கியசெல்வம் அரியநேத்திரனுக்கு (சங்குச் சின்னத்திற்கு) வாக்களிக்க தமிழ் சிவில் சமூக அமையம் கோருகின்றது.

21செப்டம்பர் 2024 அன்று இலங்கையில் நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலில் முதற் தடவையாக தமிழ்த் தேசிய ☞ 8



## 1,300 மில். டொலர் மோசடி தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது

### ரிஷாத் பதியுதீன் எம்.பி. தெரிவிப்பு

ஒன்லைன் விசா மோசடி மூலம் 1300 பில்லியன் டொலரை சுருட்ட எடுக்கப்பட்ட மோசடி முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம் மற்றும் சுமந்திரன் ஆகியோர் நீதிமன்றத்தை நாடியதால் இம்மோசடி தவிர்க்கப்பட்டதுஎன்றுஅகிலஇலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்றஉறுப்பினருமான ☞ 2

## இணைய மோசடி விசாரணைக்கு சீனப் புலனாய்வாளர்கள் வருகை

சீனர்கள் உட்பட வெளிநாட்டு பிரஜைகளை உள்ளடக்கியஇணையவழி நிதி மோசடிகளின் அதிகரிப்புக்கு எதிராக குற்றப் புலனாய்வுப் பிரிவு முன்னெடுத்துள்ள விசாரணைகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் சீனச் சிறப்பு குற்றப் புலனாய்வுப் பிரிவின்அதிகாரிகள்வருகை தந்துள்ளனர். ☞ 8

## வாக்களிப்பைக் குழப்பினால் துப்பாக்கிச் சூடும் நடத்தலாம்

### தேர்தல் ஆணைக்குழு பொலிஸாருக்கு அதிகாரம்

வாக்குச்சாவடிகளில் குழப்பத்தை ஏற்படுத்துபவர்கள் மீதும் வாக்குப்பதிவுக்கு இடையூறு விளைவிப்பவர்கள் மீதும் துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கும் தேர்தல் ☞ 8

## தேர்தல் அதிகாரிகளுக்கு செப். 10 முக்கிய கூட்டம்

மாவட்ட தேர்தல் அதிகாரிகள் செப்டெம்பர் 10 கொழும்பில் முக்கிய கலந்துரையாடலொன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் ☞ 2

### ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று

# சமஷ்டி இலங்கையின் முதல் தலைவராக வருக

### ரணிலுக்கு மாவை நேற்று வாழ்த்து





ஜனாதிபதித்தேர்தலில்ரணில்விக்கிரமசிங்க வெற்றிபெற்று, 3 மாத காலத்திற்குள் புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்கி, சமஷ்டி இலங்கையின் முதல்தலைவராக அவர் ☞ 2

### ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின்

## ஜெனிவா கூட்டத்தொடர் நாளை தொடங்குகிறது

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 57ஆவது கூட்டத் தொடர் நாளைஜெனிவாவில்ஆரம்பமாகவுள்ளது. 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' என்ற தலைப்பிலான 51/1 தீர்மானத்தின் தற்போது வரையிலான உள்நாட்டுமனிதஉரிமைகள்நிலைமைகள் தொடர்பில் அமர்வின் முதன்நாளான நாளை திங்கட்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு இலங்கை குறித்த விவாதமும் இடம்பெறவுள்ளது.

பிற்பகல் வரை நடைபெற உள்ள இந்த விவாதத்துக்கு பின்னர், 5மணிக்கு இலங்கையின் மனித உரிமைகள் ☞ 8

## அநுர வென்றால் ஒக்டோபரில் நாடாளுமன்றம் கூட்டப்படாது

தான் வெற்றி பெற்றால் எதிர்வரும் ஒக்டோபர் 8 ஆம் திகதி பாராளுமன்றத்தை கூட்டமாட்டேன் என்றும் பொதுத்தேர்தலுக்குபின்னரே நாடாளுமன்றத்தை கூட்டுவேன் என தேசிய மக்கள் கூட்டணியின் தலைவரான ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மரதன்கடவளையில் நடைபெற்ற பேரணியில் கலந்துகொண்டு பேசிய அவர், நாடாளுமன்றத்தை கலைத்துவிட்டு, பொதுத் தேர்தல் நடைபெறும் வரை ஒன்றரை மாதங்களுக்கு அரசமைப்பின்படி நாம் நாட்டை ஆட்சி ☞ 8





### மிரட்டியதற்காக தமிழ் மக்களிடமும் களங்கம் ஏற்படுத்தியதற்காக சிங்களவர்களிடமும்

## அநுர மன்னிப்புக் கேட்கவேண்டும்

### யாழ்ப்பாணத்தில் ரணில் வலியுறுத்து

யாழ்ப்பாணத்திற்கு வந்து வடக்கு மக்களைமிரட்டியமைக்காகஅநுரகுமார திசாநாயக்க உடனடியாக வடக்கு மக்களிடத்தில் மன்னிப்புக்கோர வேண்டும் என்று நான் பகிரங்கமாகக் கோருகின்றேன். அதுமட்டுமன்றி சிங்கள மக்களின் பெயரைப் பாயன்படுத்தி அவர்களுக்கு களங்கம் ஏற்படுத்தியமைக்காகஅவர்களிடத்திலும் மன்னிப்புக்கோர வேண்டும் என்றும் நான் வலியுறுத்துகின்றேன்.

முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சரும், ஐ.தே.க.வின் பிரதான அமைப்பாளருமான விஜயகலா மகேஸ்வரனின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் சங்கலியன் பூங்காவில் நேற்று நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்திலும்நாடாளுமன்றஉறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் ஏற்பாட்டில் நெல்லியடியிலும் இடம்பெற்ற கூட்டத்திலும் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் ☞ 2

### பதவியிழந்த பொலிஸ்மா அதிபர்

## தென்னக்கோனுக்கு ஆதரவாக 2 பிக்குகள் நீதிமன்றத்தில் மனு

தேசபந்து தென்னகோன் பொலிஸ் மாஅதிபராக கடமையாற்றுவதைத் தடைசெய்து உயர் நீதிமன்றம் பிறப்பித்த இடைக்காலஉத்தரவைநீக்கக்கோரி பெல்லன்விலரஜமஹாவிஹாராதிபதி கலாநிதி பெல்லன்வில தர்மரத்ன தேரர் உள்ளிட்ட மூன்று தேரர்களினால் உயர்நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பெல்லன்விலரஜமஹாவிஹாராதிபதி கலாநிதி பெல்லன்வில தர்மரத்ன தேரர், கொள்ளுப்பிட்டி ராகுல தேரர் மற்றும் பேராசிரியர் அகலகட சிறிசுமண தேரர் ஆகியோரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தேசபந்துதென்னகோன்பொலிஸ் மாஅதிபராக கடமையாற்றுவதை நிறுத்துமாறு கோரி பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்டோரினால் தாக்கல் செய்யப்பட்ட மனு ஜூலை மாதம் 24 விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, ☞ 8

## ஒரு வேட்பாளர் மற்றொருவருக்காக பரப்புரை செய்வதற்குத் தடை விதிப்பு

ஜனாதிபதிவேட்பாளர் ஒருவர் ஏனைய வேட்பாளர்களுக்காகப் பரப்புரை செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக தேர்தல் ஆணையாளர் சமன் ரத்நாயக்க தெரிவித்ததாவது:

இவ்வாறான செயற்பாடுகள் சட்டத்துக்கு விரோதமானது மட்டுமன்றி நெறிமுறையற்ற செயற்பாடுகளாகவே இருக்கும்.

இந்த வேட்பாளர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

மீண்டும் மீண்டும் சொல்லப்போகிறோம் என்று சொல்லி நிறுத்தப்பட்டுள்ள தமிழ் பொது வேட்பாளர் அரியநேத்திரன், அதற்கான வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளாமல் விட்டுவிட்டார். அதாவது தான் ஏன் இந்த ஜனாதிபதித் தேர்தலில் ஒரு வேட்பாளராகக் களமிறங்கவேண்டி ஏற்பட்டது என்பதை யாருக்குச்சொல்லவேண்டுமோஅவர்களுக்குச் சொல்வதற்கான வாய்ப்பை உதாசீனம் செய்திருக்கிறார்.

ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு இடையிலான பொது விவாதம் நேற்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற இருந்தது. அதில் அரியநேத்திரனும் கலந்துகொள்ளவில்லை. இந்த விவாதத்திற்காக சஜித் பிரேமதாச, நாமல் ராஜபக்ச, திலித் ஜயவீர, அரியநேத்திரன் ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தனர். ஆனால் விவாத மேடைக்கு திலித் ஜயவீர மட்டுமே வந்திருந்தார். மற்றைய மூவரும் ஏமாற்றிவிட்டார்கள்.

சஜித் பிரேமதாசவும் நாமல் ராஜபக்சவும் விவாதத்திற்கு வராமல் விட்டதற்கு ஒரு நியாயம் இருக்கலாம். ஏனெனில் இந்த விவாதத்திற்குவந்திருக்கவேண்டியமற்றைய இரு முன்னணி வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்கவும்அநுரகுமாரதிஸநாயக்கவும் விவாத்திற்கு வர ஒத்துக்கொள்ளவில்லை என்ற பின்னர் அந்த விவாதத்திற்குத் தாங்கள் சென்று எந்தப் பயனும் இல்லை என்று அவர்கள் கருதியிருக்கக்கூடும். அவர்களுக்கு இடையில் கடும் போட்டி நிலவுவதால் அவர்கள் மற்றவர்களுக்குச் சாதகமான வகையிலான எந்தவொரு காரியத்தையும் செய்யப் பின்னடிப்பார்கள் என்பது புரிந்துகொள்ளக்கூடியதே.

ஆனால், தமிழ் பொது வேட்பாளரின் விடயம் அப்படிப்பட்டதல்ல. அவர் ஜனாதிபதியாவதற்காகப் போட்டியிடுபவர் அல்லர். தமிழர்களின் பிரச்சினைகள் இன்னமும் தீர்க்கப்படாமல் தொடர்கின்றன என்கிற விடயத்தை தூக்கிப் பிடிப்பதற்காக நிறுத்தப்பட்டவர். எனவே அவர் தான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான காரணங்களைச்சிங்களமக்களிடம்விளக்கக் கடமைப்பட்டவர். இந்தக் காலப்பகுதியில் இதைவிட்டால் அவருக்கு வேறு மிகச் சிறப்பான மேடை கிடைக்கப்போவதில்லை அவரது இலக்கை அடைய. ஆனாலும் அவர் வாய்ப்பைப் பயன்படுத்தவில்லை. அதைக் கைவிட்டுவிட்டார். ஆகமொத்தத்தில் வடக்கு கிழக்குக்குள் குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டுவதுதான் இவர்களின் நோக்கம்போலும்.

............................

பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஒருவார காலமாக யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த நிலையில் கொழும்பு திரும்பும் வழியில் வவுனியாவில் நேற்று தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஆகியோரைச் சந்தித்துப் பேசியிருந்தார். அது பற்றி நேற்றே இந்தப் பத்தியில் தகவல் சொல்லியிருந்தேன். சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு தெரிவிப்பதாக தமிழ் அரசுக் கட்சி முடிவு எடுத்திருக்கும் நிலையில் அதற்கான நன்றியறிதலைத் தெரிவிக்கும் விதமாகவே இந்தச் சந்திப்புப் பெரிதும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததால் அங்கு பெரிதாக விடயங்கள் ஆராயப்படவில்லை.

தனது ஒருவார கால யாழ்ப்பாண பயணத்தில் பல தரப்பினருடனும் அரசியல் தீர்வுதொடர்பில்தான்நடத்தியசந்திப்புக்களின் சாராம்சம் குறித்து அவர் தமிழ் அரசுக் கட்சியினருக்கு விளக்கினார். அந்த யாழ்ப்பாண சந்திப்புக்களேகூட தமிழ் அரசுக் கட்சியின் ஆதரவுடன் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தவைதான். இந்தச் சந்திப்புக்களின்போது பேராசிரியர் பீரிஸ் பெரும்பாலும் சந்திரிக்கா அம்மையாரின் பிராந்தியங்களின் அரசு என்ற தீர்வுப் பொதி குறித்தே அதிகம் பேசியிருக்கின்றார்.

இந்தத் தீர்வுப் பொதி கலாநிதி நீலன் திருச்செல்வத்தின் முழு முயற்சியினால் தயாரிக்கப்பட்டது. அதில் பேராசிரியர் பீரிஸும் பங்கெடுத்திருந்தார். அப்படித் தனது பங்களிப்புடனும் கொண்டுவரப்பட்ட தீர்வுப் பொதியை எடுத்து ஆராய்ந்து அதில் மேற்கொள்ளப்படவேண்டிய திருத்தங்களின் அடிப்படையில் ஒரு தீர்வை நோக்கி முன்னேறலாம் என்பதே பீரிஸின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

தமிழர்களின்பிரச்சினைக்குஇலங்கையில் உருவாக்கப்பட்ட தீர்வுகள் அனைத்திலுமே சந்திரிகா அம்மையாரின் பிராந்தியங்களின் அரசு தீர்வே மிகச் சிறப்பானது என்று சொல்லப்படுவதுண்டு. 2015இல் ரணில் - மைத்திரி கூட்டு ஆட்சி வந்தபோது, தன்னால் முன்வைக்கப்பட்ட பிராந்தியங்களின் அரசு என்கிற தீர்வுப் பொதியளவுக்குக்கூட தமிழர்களால் இப்போதைக்கு தீர்வை எட்டுவதற்கான களச்சூழல் தெற்கு அரசியலில் இல்லை என்று சந்திரிகா அம்மையாரே கூறியிருந்தார். அவரது இந்தத் தீர்வுப் பொதியையும் தமிழர்கள் கடந்த காலங்களில் கடுமையாக எதிர்த்தேயிருந்தனர். (நாங்கள் எதைத்தான் எதிர்க்காமல் விட்டோம்?) இந்தக் காரணத்திற்காகவே நீலன் திருச்செல்வம் கொல்லப்பட்டார் என்கிற குற்றச்சாட்டும் உண்டு.

அந்தத் தீர்வுப் பொதி நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை உறுப்பினர்களால் தீயிட்டு எரிக்கப்பட்டபோது தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்கு முன்வரிசையில் அமைதியாக அமர்ந்துகொண்டிருந்தார். அப்படி தமிழர்கள், சிங்களவர்கள் என்று இரு தரப்பினராலும் எதிர்க்கப்பட்ட அந்தப் பொதியை அடிப்படையாகக்கொண்டு தீர்வை நோக்கி முன்னேறலாம் என்பது பேராசிரியர் பீரிஸின் திட்டம். ஜனாதிபதித் தேர்தலில் சஜித் வெற்றிபெற்றதும்உடனடியாகநாடாளுமன்றத் தேர்தலை நடத்தி அதன் ஆட்சியையும் கைப்பற்றிக்கொண்டதும் அவசரமாக இந்தத் தீர்வுப்பொதியின் அடிப்படையில் திருத்தப்பட்ட ஒரு வரைவை முன்வப்பது தொடர்பாகவே பீரிஸ் இப்போது அதிக அக்கறை செலுத்தி வருகின்றார்.

அவரது மூளையில் இருந்தும் கிடைத்தவற்றைக் கொண்டு உருவாக்கப்பட்ட அந்த பிராந்தியங்களின் அரசு தீர்வை வெற்றிகரமாக நிறைவேற்றிவிடவேண்டும் என்ற கரிசனை, அவசரம், நோக்கம் பீரிஸிடம் காணப்படுகின்றது என்று அவரைச் சந்தித்தவர்கள் தெரிவித்தனர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள் பலரையும் அவர் சந்தித்து இது தொடர்பில் பேசியிருக்கிறார். விரைவிலேயேஇந்தத்தீர்வை நிறைவேற்றி வெற்றிகண்டுவிடவேண்டும் என்கிற பரபரப்பு பீரிஸிடம் காணப்படுகின்றது.

இப்படி இனப்பிரச்சினைகான நிரந்தரத் தீர்வு முயற்சிகள் குறித்து சஜித் தரப்புடன் தமிழ் அரசுக் கட்சி பேசிவரும் அதேவேளை, தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கான தீர்வு குறித்தும் மற்றொருபுறத்தில் அவருடன் பேசப்பட்டு வருகின்றது. காணிப் பிரச்சினை, பௌத்தமயமாக்கல்,விகாரைகளின்பிரச்சினை, சிங்களக் குடிஏற்றங்கள், அரசியல் கைதிகளின் விடுதலை, கல்முனை தமிழ்பிரதேசசெயலகப் பிரிவுப் பிரச்சினை, மயிலத்தமடு மேய்ச்சல் நிலப் பிரச்சினை என்று தமிழர்களின் அன்றாடப் பிரச்சினைகள் தொடர்பாக ஓர் இணக்கப்பாட்டை எட்டும் நோக்கத்தோடு இந்தக்கலந்துரையாடல்கள்இடம்பெற்றுள்ளன. அதில் சில முன்னேற்றகரமான நகர்வுகள் இடம்பெற்றள்ளன என்று தெரிகிறது.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## சமஷ்டி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரவேண்டும் என்று வாழ்த்தியிருக்கிறார் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா.

நேற்று முன்னிரவில் தன்னைத் தனது வீட்டில் வந்து சந்தித்துப் பேசிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமே சேனாதிராசா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

-தெல்லிப்பளையில் உள்ள மாவை சேனாதிராஜாவின் தனிப்பட்ட இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. அவரது வீட்டிற்குச் செல்லும் குறுகலான வீதி வழியாக தனது படை பரிவாரங்கள் சூழ வாகனத் தொடரணியாக ஜனாதிபதி அந்த வீட்டை வந்தடைந்தார். அவரைப் பாரம்பரியப்படி பொன்னாடை போர்த்து வரவேற்றார் சேனாதிராசா. பின்னர் அவர்கள் இருவரும் மட்டும் தனியாக அமர்ந்து பேச்சு நடத்தினர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இரண்டு தேர்தல் பிரசாங்களில் பங்கேற்பதாக நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தவேளையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. சந்திப்பின் பின்னர் அது குறித்து ஜனாதிபதி செய்தியாளர்களிடம் எதுவும் பேசவில்லை.

இந்தச் சந்திப்பு குறித்து பின்னர் மாவை சேனாதிராசா தெரிவித்ததாவது:

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலிலே ஒரு வேட்பாளராக இருப்பவர். என்னைச் சந்திக்க வேண்டும் என்று எனது வீட்டிற்கு வந்துள்ளார். நாங்கள் அவரை ஒரு ஜனாதிபதி என்ற முறையிலும், தேர்தலில் வேட்பாளர் என்ற முறையிலும் நானும் சம்மதம் கொடுத்தேன். ஆனபடியால் இந்த தேர்தல் நேரத்திலே அவரும் வந்திருப்பதை எல்லோரும் உணர்ந்துகொள்ளலாம்.

அவர் அது தனக்கு ஆதரவு என்று நினைத்தாலும் அதைப்பற்றி அதிகம் நாங்கள் பேசிக்கொள்ளவில்லை.

தேர்தல் முடிந்ததும் நீங்கள் வெற்றி பெறவேண்டும். இனப் பிரச்சினைக்கு 3 மாத கால அவகாசத்திற்குள் புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்கிசமஷ்டிஇலங்கையின்தலைவராக நீங்கள் வந்து, இனப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பீர்கள் என நம்புகின்றோம் என்பதை நான் அவருக்குக் கூறினேன்.

அவர் பெரும்பாலும் எங்கள் பிரதேசங்களுடையபொருளாதாரஅபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பிலேயே குறிப்பிட்டுப் பேசியிருந்தார்.

இதற்கு தேர்தல் முடிந்த பின்பு, அவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால், நம்புகின்றோம் அவர் ஜனாதிபதியாக வருவார் என்று - 3 மாத கால அவகாசத்திற்குள் புதிய அரசமைப்பை ஒன்றை உருவாக்கி, சமஷ்டி இலங்கையின் தலைவராக நீங்கள் இருந்து, இந்த நாட்டின் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதே எமது விருப்பமாகவும் எதிர்பார்ப்பாகவும் இருக்கின்றது.

தமிழர்களின் பிரதேசம் போரினால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது. நீங்கள் முன்பும் இந்தப் பகுதியில் மீள்குடியேற்றம், வீட்டுத் திட்டம், பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை எடுத்திருக்கின்றீர்கள், அதைப் போல இந்தப் பிரதேசத்தின் பொருளாதார முன்னேற்றத்தையும் செயற்படுத்த வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கின்றேன் எனவும் கூறினேன்.

தேர்தல் முடிந்ததும் இந்த விடயங்களில் தான் அக்கறை கொண்டு தான் செய்யக்கூடிய அத்தனையையும் செய்வதற்கு தான் ஆயத்தமாக இருக்கின்றேன் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

இவ்வாறு மாவை சேனாதிராசா கூறினார்.

## தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பான எதிர்கால நடவடிக்கைகளைத் திட்டமிடுவது தொடர்பில் இந்தக் கூட்டத்தில் கவனம் செலுத்தப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வாக்கு எண்ணும் மையங்கள், தேர்தல் பணிகளுக்குத்தேவைப்படும்பணியாளர்களின் எண்ணிக்கை உள்ளிட்ட அனைத்துத் தேர்தல் நடவடிக்கைகள் குறித்தும் தேர்தல் அதிகாரிகளுக்குவிளக்கமளிக்கப்படும்எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## ஒரு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்கள் அறிந்திருக்கிறார்கள். எனவே பொதுமக்கள் தாங்களாகவே முடிவு செய்யவேண்டும்.

அரச ஊழியர்களின் சம்பள திருத்தம் தொடர்பான அரசின் அண்மைய அறிவிப்பு கவலைக்குரியது. அது தற்போது நடைபெற்று வரும்தபால்மூலவாக்களிப்புநடவடிக்கைகளில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் - என்றார்.

## அநுர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறுதெரிவித்தார். அவர்தெரிவித்ததாவது:

இரண்டு வருடங்களுக்கு முன்னதாக ஜனாதிபதி தேர்தல் நடத்துவதற்கான நிலைமைகள் நாட்டில் ஏற்படும் என்று யாரும் ஏற்றுக்கொண்டிருக்கவில்லை. அப்போது வரிசைகள் யுகமே இருந்தது. அப்போது யாருக்கும் தேர்தலைப் பற்றி சிந்தித்திருக்க முடிந்திருக்கவில்லை.

அப்படியானதொரு காலத்தில்தான் ஜனாதிபதிபதவியைஏற்றுக்கொண்டிருந்தநான் இரண்டு வருடங்களில் ஜனாதிபதி தேர்தலை நடத்தக்கூடிய சூழலை உருவாக்கியுள்ளேன்.

நான் நாட்டில் உறுதிப்பாட்டை ஏற்படுத்தியுள்ளதோடு அபிவிருத்திச் செயற்பாடுகளை நோக்கி நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றேன். எனக்கு இந்தத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதே ஒரே நோக்கமாக இருக்கின்றது. 'இயலும் ஶ்ரீலங்கா' என்பது தான் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டத்தின் தொனிப்பொருளாகும்.

சஜித்தும், அநுரவும் நெருக்கடியான நிலையில் பொறுப்புக்களைப் பெற்றுக் கொள்ளாது தப்பியோடிவிட்டார்கள். அவர்களைப்போன்றுநானும்இருந்திருந்தேன் என்றால்தற்போது தேர்தலைநடத்த முடியுமா?

சஜித்தும், அநுரவும் ஜனாதிபதித் தேர்தலை நடத்தக்கூடிய வாய்ப்பினை உருவாக்கியமைக்காக அவர்கள் தங்களின் பரப்புரைக் கூட்டங்களுக்கு முன்னதாக எனக்கு ஒவ்வொரு முறையும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளவேண்டும். நான் பொறுப்பேற்றகாலம் நெருக்கடிகள் நிறைந்தது. தற்போதும் எமக்கு நெருக்கடிகள் தீர்ந்துவிடவில்லை. பிரச்சினைகள் இருக்கின்றன. எவ்வாறாயினும் எதிர்காலம் பற்றிய தூர நோக்கான பார்வை எனக்குள்ளது.

எனது 'இயலும் ஶ்ரீலங்கா' என்ற இலக்கில் ஐந்து நோக்கங்கள் உள்ளன. வாழ்க்கைச் சுமையைகுறைத்தல்,தொழில்வாய்ப்புக்களை அதிகரித்தல், ஏற்றுமதிப் பொருளாதாரத்தினை ஏற்படுத்தல், உறுமய மற்றும் அஸ்வெசுவமை பாதுகாத்தல், உற்பத்தியை அதிகரித்தல் ஆகியனவே அவையாகும்.

யாழ்ப்பாணத்துக்கான நதி நீர் திட்டம் உள்ளது. சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுக்கவுள்ளோம், நிர்மானத்துறையை மேம்படுத்தவுள்ளோம். உற்பத்தியை அதிகரிக்கச் செய்யவுள்ளோம். பூநகரி, மாங்குளத்தில் பொருளாதார வலயங்களை அமைக்கவுள்ளோம். இவ்விதமான செயற்பாடுகளை மத்திய ஆட்சியால் மட்டும் தனியாக முன்னெடுக்க முடியாது.

ஆகவேஒன்பதுமாகாணசபைகளுக்கான முழுமையான அதிகாரங்களையும் , அபிவிருத்திக்கானவிசேடஅதிகாரங்களையும் பெற்றுக்கொடுப்பதற்குநான்நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளேன். அத்துடன், மாகாண அபிவிருத்திக்காக விசேட நிறுவனங்களை உருவாக்குவதற்கும் எதிர்பார்த்துள்ளேன். இதனடிப்படையில்தான் உங்களின் பெறுமதியான வாக்குகளைக்கோருகின்றேன்.

அநுரகுமார திசாநாயக்க வடக்கிற்கு வருகை தந்தார். உங்களின் வாக்குகளைக் கோரினார். அதன்போது அவர் என்ன கூறினார் என்பது நினைவு இருக்கின்றதா? "தெற்கில் உள்ளவர்கள் தன்னை வெற்றிபெறச் செய்வதற்கு தயாராக இருக்கின்றார்கள். அவ்வாறான நிலையில் அவர்களின் மனோநிலை மாறினால் எவ்விதமான நிலைமைஏற்படும்என்று எனக்குத் தெரியாது. அவர்களின் மனோநிலை மாறுபடுவதற்கு அல்லது அவர்களின் நிலைப்பாட்டில் இருந்து நீங்கள் வேறுபடுவதற்கு தயராக இருக்கின்றீர்களா? வடக்கு மக்கள் தெற்கின் நிலைப்பாட்டிற்கு எதிரானவர்கள் என்று காண்பிப்பதற்கு நீங்கள் விரும்புகின்றீர்களா? நாங்கள் வெற்றிபெறவுள்ளோம். நீங்களும் வெற்றியின் பங்குதாரர்களாக ஆகவேண்டும். எதற்கு எதிரானவர்களாக எப்போதும் மாறிவிட வேண்டாம்" என்றுதான் அநுர குறிப்பிட்டார்.

அநுரகுமாரவின்இந்தக்கூற்றுக்கள்வடக்கு மக்களை அச்சுறுத்துவதாக அமைந்துள்ளன. அதாவது தனக்கு வாக்களிக்காது விட்டால் "நாங்கள் பார்த்துக்கொள்வோம்" என்று அவர் கூறுகின்றார். அவருடைய அச்சுறுத்தும் கூற்றுக்களை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

2010ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின்போது நான் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தேன். சரத்பொன்சேகாவுக்கு வாக்களிக்குமாறு கோரினேன். அப்போது வடக்கு மக்கள் பொன்சேகாவுக்கும், தெற்கு மக்கள் மஹிந்த ராஜபக்சவுக்கும் வாக்களித்தார்கள். அதன் பின்னர் ஒன்றுமே நடக்கவில்லை. அதற்காக தெற்கு மக்கள் வருகைதந்துவடக்குமக்களைதாக்கவில்லை. நாடு அவ்வாறே சென்றது. டக்ளஸ் தேவானந்தாவுக்கு அமைச்சுப் பதவி கிடைத்தது.

2015இல்நாம்மைத்திரிபாலசிறிசேனவுக்கு வாக்களிக்குமாறு உங்களிடம் கோரினோம். வடக்கு மக்கள் அவ்வாறே செய்தார்கள். தெற்கு மக்கள் மஹிந்த ராஜபக்சவுக்கு வாக்களித்தார்கள். அதன் பின்னரும் எதுவும் நடைபெறவில்லை.

2019இல் சிங்கள மக்கள் கோட்டாபயவுக்கும், வடக்கு மக்கள் சஜித் பிரேமதாசவுக்கும் வாக்களித்தார்கள். கோட்டாபய வெற்றி பெற்றதன் பின்னர் படையெடுத்து வடக்குக்கு வருகைதந்தாரா? எதுவும்நடைபெறவில்லை.

நாம் எப்போதும் தேர்தல் பெறுபேறுகளை ஏற்றுக்கொண்டிருக்கின்றோம். முன்னைய காலத்திலும் தமிழ் அரசுக் கட்சிக்குத்தான் வடக்கு மக்கள் வாக்களிப்பார்கள். தெற்கு மக்கள்தேசியக்கட்சிகளுக்குவாக்களிப்பார்கள். இவ்வாறு வரலாறு நெடுகிலும் மாறுபட்ட நிலைப்பாடுகள் உள்ளன.

அவ்வாறு இருக்கையில் அநுரகுமார திசாநாயக்க எவ்வாறு வடக்கு மக்களை

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# சஜித்தின் வெற்றியை உறுதிப்படுத்த மு.கா செயற்குழு அம்பாறை களத்தில்



(நூருல் ஹுதா உமர்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை வெல்ல வைக்கும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பான செயற்பாடுகளை அம்பாறை மாவட்டத்தில் முன்னெடுப்பதற்காக உருவாக்கப்பட்ட குழுவின் கூட்டம் கட்சியின் தவிசாளரும், வடக்கு கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான ஏ.எல். அப்துல் மஜீத் தலைமையில் சாய்ந்தமருதில் இடம்பெற்றது.

07 உறுப்பினர்களைக் கொண்ட இந்தக் குழுவில் கல்முனை தேர்தல் தொகுதிக்கான ஜனாதிபதி தேர்தல் பணியைமுன்னெடுப்பதற்காகமுஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ், பொத்துவில்தேர்தல்தொகுதிக்கானஜனாதிபதிதேர்தல் பணியை முன்னெடுப்பதற்காக முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமானபைசல் காசிம், சம்மாந்துறை தொகுதிக்கானஜனாதிபதி தேர்தல் பணியை முன்னெடுப்பதற்காக முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், முன்னாள்நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஐ. மன்சூர் ஆகியோர்களும்நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.



மேலும்இந்தகுழுவில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்பொருளாளரும், கல்முனை மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயருமான றஹ்மத் மன்சூர், முஸ்லிம் காங்கிரஸின் பிரதி செயலாளர் மன்சூர் ஏ காதர், முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தேசிய அமைப்பாளரும், கிழக்குமாகாணசபையின்முன்னாள்அமைச்சருமான எம்.எஸ். உதுமாலெப்பை, முஸ்லிம் காங்கிரஸின் சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளரும், கல்முனைமாநகரசபையின்முன்னாள்மேயருமான கலாநிதி சிராஸ் மீராசாகிப், முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் மற்றும் சமய விவகார இணைப்பாளர் என்.ரீ.சப்றாஸ், முஸ்லிம் காங்கிரஸின் உச்ச பீட உறுப்பினரும், அம்பாறை மாவட்ட செயற்குழுவின் செயலாளருமான ஏ.சீ. சமால்டீன் ஆகியோர் அடங்கியுள்ளனர்.

ஜனாதிபதி தேர்தல் காரியாலயங்களை திறப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவும், அம்பாறை மாவட்டத்தில் ஜனாதிபதி தேர்தல் தொடர்பான பொதுக் கூட்டங்கள், வட்டார ரீதியான பிரசாரக்கூட்டங்கள், வட்டாரரீதியாகவீடுவீடாகசென்று பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற தீர்மானங்கள் இதன்போது மேற்கொள்ளப்பட்டதுடன், மீண்டும் அடுத்த மீளாய்வுக் கூட்டம் எதிர்வரும் 10.09.2024 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.(05)

## மு.கா. கட்சியின் தேசிய இளைஞர் அமைப்பாளர் சட்டத்தரணி ஆரிப் சம் சுதீன் திடீர் இராஜனாமா

### அநுரவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானம்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உச்சபீட உறுப்பினராகவும், அக்கட்சியின் தேசிய இளைஞர் அமைப்பாளராகவும் பதவி வகித்த சட்டத்தரணி ஆரிப் சம்சுத்தீன், அக்கட்சியில் வகித்த அனைத்து பதவிகளிலிருந்தும், கட்சியின் உறுப்புரிமையிலிருந்தும் விலகிக் கொள்வதாகத் தெரிவித்தார்.



தனது பதவி விலகல் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு தெளிவுபடுத்தும் ஊடக சந்திப்பு சாய்ந்தமருதில் உள்ள அவரது அலுவலகத்தில் இடம்பெற்றது.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த சட்டத்தரணி ஆரிப் சம்சுதீன் -

2015ஆம் ஆண்டு முதல் ஏறக்குறைய 10 வருடங்களாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினராக செயற்பட்ட நான் சென்ற இரு வருடங்களாக அக்கட்சியின் எந்தவொரு கூட்டங்களிலும் கலந்து கொள்ளவில்லை. இவ்வாறான அரசியல் சூழலில் ஏன் நான் திடீரென அக்கட்சியிலிருந்து விலக வேண்டும் என நீங்கள் நினைக்கக் கூடும்.

இத்தேசம்சுதந்திரமடைந்து75வருடங்கள்கடந்து விட்டது. இந்த 7 தாசப்தத்திலும் இந்நாட்டை ஆட்சி செய்த ஆட்சியாளர்களால் இந்நாடும், மக்களும் நன்மைடையவில்லை. நன்மையடைந்தவர்கள் யார் என்பதை இந்நாடு அறியும். இந்த அரசியல் கலாசாரம் மாற்றப்பட வேண்டும். ஆனால், இன்னுமே மாற்றங்கள் ஏற்படவில்லை.

இந்நிலையில் எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள 9 ஆவது ஜனதிபதித் தேர்தல் ஒரு மாற்றத்துக்கான தேர்தலாக அமைய வேண்டுமென்பது எனது ஆசை மட்டுமல்ல நீதியையும், நியாயத்தையும், சமத்துவத்தையும், சம உரிமையையும் விரும்புகின்றவர்களின் அவாவும் அதுவாகவே இருக்கக் கூடும்.

அது மாத்திரமின்றி ஊழல், மோசடி, அதிகாரத்துஷ்பிரயோகமற்ற ஆட்சியாளர்களால் ஆளப்படுகின்ற ஒரு நாடாக இலங்கை மிளிர வேண்டும். அதற்கோர் புதிய சக்தி அவசியம். அச்சக்தி தேசிய மக்கள் சக்தியிடம் காணப்படுவதை நான் காண்கின்றேன்.

தேசிய மக்கள் சக்தி ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமாரதிசாநாயக்கவின்தேர்தல்விஞ்ஞாபனத்திலுள்ள கோட்பாடுகளும் அதற்கான செயற்பாடுகளும் இந்நாட்டு மக்கள் எதிர்பார்க்கும் புதியதோர் அரசியல் கலாசாரத்தை உருவாக்கும் என்ற நம்பிக்கை எனக்குள்ளது. அந்தநம்பிக்கையின்அடிப்படையிலும் எந்தவொருசலுகையும், எதிர்பார்ப்புமின்றிஎதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திசாநாயக்கவை ஆதரிக்கத் தீர்மானித்துள்ளேன்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைமைத்துவம் அக்காட்சியில் இருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களை தொடர்ந்தும் பாதுகாத்து வருகின்றது. இருபதாவது திருத்தச் சட்டத்திற்கு கட்சியினுடைய தீர்மானத்தை மீறி வாக்களித்தவர்களுக்குஒழுங்காற்றுநடவடிக்கையை எடுக்க தவறியமை, கட்சியில் இருக்கும் என்னை போன்ற சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு முறையான அங்கீகாரம்வழங்கப்படாமல்செயற்படுவது எமக்குள் அதிருப்தியை ஏற்படுத்திய விடயங்களாகும். என்றும் இங்கு சுட்டி காட்டினார். (05)

## ஆஸி. நாட்டின் இலங்கைக்கான தூதுவர் குழுவுடன் ச.குகதாசன் எம்.பி. சந்திப்பு





(ஹஸ்பர் ஏ.எச்)

இலங்கைக்கான ஆஸ்திரேலிய தூதுவர் தலைமையிலான குழு தமிழரசுக்கட்சியின் திருகோணமலை மாவட்டப் பணிமனைக்கு வெள்ளிக்கிழமை மாலை விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்கள்.இலங்கை தமிழரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் அவர்களை சந்தித்து கலந்துரையாடினர்.

இதன் போது திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் எதிர்கொள்ளும் நிலச் சிக்கல் உள்ளிட்ட பல்வேறு சிக்கல்கள் பற்றியும், அதற்கான தீர்வுகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.(05)

## பல்வேறு திருட்டுகளில் ஈடுபட்ட ஒருவர் வவுனியாவில் கைது

### திருடிய நகைகளை வாங்கிய வர்த்தகர்களும் கைது

அனுராதபுரத்தில் ஒரு மோட்டர் சைக்கிளை திருடி பல இடங்களில் திருடப்பட்ட மோட்டார் சைக்கிளில் சென்றுபலபெண்களிடம்கத்தியைகாட்டி சங்கிலி அறுத்த சம்பவம் தொடர்பில் அனுராதபுரத்தை சேர்ந்த ஓர் இளைஞனும், திருடப்பட்ட தங்க நகைகளை கொள்வனவு செய்த வவுனியாவை சேர்ந்த இரு வர்த்தகர்களும் கைது செய்யப்பட்டுள்ளளனர் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா தோணிக்கல் பகுதியில் வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்ற பெண்ணிடம் மோட்டர் சைக்கிளில் பின் தொடர்ந்து சென்ற இளைஞன் பெண்ணின் கழுத்தில் இருந்த மூன்று பவுண் தங்கச்சங்கிலியை அறுத்து சென்றுள்ளான். அதனை தொடர்ந்து பாதிக்கப்பட்ட பெண் வவுனியா பொலிஸில் முறைப்பாடுசெய்திருந்தார்.

குறித்த முறைப்பாடு தொடர்பில் வவுனியா தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஜெயக்கொடியின், வழிகாட்டலில்உபபொலிஸ்பரிசோதகர் அகமட் தலைமையில் பொலிஸ் சார்ஜன்ட்டுகளான திசாநாயக்கா, திலீபன், பொலிஸ்கொன்தாபிள்களான உபாலி, தயாளன், ரணில், பொலிஸ் கொன்ஸ்தாபில் கால்கே அடங்கிய பொலிஸ்குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது அனுராதபுரத்தைச சேர்ந்த 31வயது இளைஞன்ஒருவனை சந்தேகத்தில் கைது செய்திருந்தனர். அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் போது பல அதிர்ச்சிகரமான தகவல்கள் வெளியாகியுள்ளன. இதன்போது குறித்த இளைஞனிடம் இருந்து அனுராதபுரத்தில் திருடப்பட்ட மோட்டர் சைக்கிள் ஒன்று மீட்கப்பட்டதுடன், குறித்த திருடப்பட்ட மோட்டார் சைக்கிளை பயன்படுத்தி சங்கிலிகள் அறுக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின்போது கடந்த மூன்று மாதக் காலப்பகுதியில் அனுராதபுரம் பகுதியில் ஒரு மோட்டார் சைக்கிளும், ஒரு சங்கிலியும், மிகிந்தலை பகுதியில் மூன்று சங்கிலியும், பரசண்கஸ்கல பகுதியில் ஒரு சங்கிலியும், பூனாவப் பகுதியில்ஒருசங்கிலியும், பூவரசங்குளம் பகுதியில் ஒரு சங்கிலியும், உலுக்குளம் பகுதியில்ஒருசங்கிலியும், தோணிக்கல் பகுதியில் ஒரு சங்கிலியும் என 9 இடங்களில் குறித்த இளைஞனால் சங்கிலிகள் அறுத்துச் சென்றமை தெரியவந்துள்ளது.

அத்துடன், திருடப்பட்ட நகைகள் வவுனியா நகர் பகுதியில் உள்ள நகை விற்பனை நிலையங்கள் இரண்டில் உருக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டதுடன், இரு நகைக்கடை உரிமையாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். திருட்டுச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட அனுராதபுரம் பகுதியைச் சேர்ந்த சந்தேக நபருக்கு வேறு பல குற்றச்செயல்களில் ஈடுபட்டமை தொடர்பில் பல்வேறு நீதிமன்றங்களில் 6 பிடியாணைகள் காணப்படுகின்றன. அதில் நான்கு திறந்த பிடியாணையும், இரண்டு நாள் பிடியாணையும் உள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

திருடப்பட்ட மோட்டர் சைக்கிளும், கைது செய்யப்பட்ட பிரதான சந்தேக நபர் மற்றும் கடை உரிமையாளர்கள் இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ரணிலுக்குத் தகுதி உண்டா?

யாழ்ப்பாணத்திற்குவந்து வடக்குமக்களைமிரட்டியமைக்காக அநுரகுமார திசாநாயக்க உடனடியாக வடக்கு மக்களிடத்தில் மன்னிப்புக்கோர வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

தேர்தல் பரப்புரைக்காக யாழ்ப்பாணம் வந்திருந்த அவர், முத்திரைச் சந்தி கிட்டுப் பூங்கா மற்றும் நெல்லியடியில் நடந்த கூட்டங்களில் பேசும்போது இதனை வலியுறுத்தினார்.

“அநுரகுமார திசாநாயக்க வடக்கிற்கு வருகை தந்தார். உங்களின் வாக்குகளைக் கோரினார். அதன்போது அவர் என்ன கூறினார் என்பது நினைவு இருக்கின்றதா? தெற்கில் உள்ளவர்கள் தன்னை வெற்றிபெறச் செய்வதற்கு தயாராக இருக்கின்றார்கள். அவ்வாறான நிலையில் அவர்களின் மனோநிலை மாறினால் எவ்விதமான நிலைமை ஏற்படும் என்று எனக்குத் தெரியாது. அவர்களின் மனோநிலை மாறுபடுவதற்கு அல்லது அவர்களின் நிலைப்பாட்டில் இருந்து நீங்கள் வேறுபடுவதற்கு தயராக இருக்கின்றீர்களா? வடக்கு மக்கள் தெற்கின் நிலைப்பாட்டிற்கு எதிரானவர்கள் என்று காண்பிப்பதற்கு நீங்கள் விரும்புகின்றீர்களா? நாங்கள் வெற்றிபெறவுள்ளோம். நீங்களும்வெற்றியின்பங்குதாரர்களாக ஆகவேண்டும். எதற்கு எதிரானவர்களாக எப்போதும் மாறிவிட வேண்டாம் என்றுதான் அநுர குறிப்பிட்டார்.

அநுரகுமாரவின் இந்தக் கூற்றுக்கள் வடக்கு மக்களை அச்சுறுத்துவதாக அமைந்துள்ளன. அதாவது தனக்கு வாக்களிக்காதுவிட்டால்”நாங்கள்பார்த்துக்கொள்வோம்” என்று அவர் கூறுகின்றார். அவருடைய அச்சுறுத்தும் கூற்றுக்களை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன்” என்றார் அவர்.

2010, 2015, 2019 அரசுத் தலைவர் தேர்தல்களின் போதும் இலங்கையின் எஞ்சிய பாகங்களைச் சேர்ந்த சிங்கள மக்கள் வாக்களித்ததற்கு நேர் எதிர்மாறாகத்தான் தமிழ் மக்கள் வாக்களித்தார்கள் என்றபோ–தும் அதற்காக சிங்கள மக்கள் தமிழர்களைத்தாக்கவில்லைஅல்லதுஎதிர்வினையாற்றவில்லை என்று சுட்டிக்காட்டிய ரணில் விக்கிரமசிங்க, வடக்கு மக்கள் தமிழ் அரசுக் கட்சிக்கு வாக்களிப்பதும் தெற்கு மக்கள் தேசியக் கட்சிக்களுக்கு வாக்களிப்பதும் வழக்கமான செயல்தான் என்றும் தெரிவித்தார்.

‘‘2010ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின்போது நான் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தேன். சரத்பொன்சேகாவுக்கு வாக்களிக்குமாறு கோரினேன். அப்போது வடக்கு மக்கள் பொன்சேகாவுக்கும், தெற்கு மக்கள் மஹிந்த ராஜபக்சவுக்கும் வாக்களித்தார்கள். அதன் பின்னர் ஒன்றுமே நடக்கவில்லை. அதற்காக தெற்கு மக்கள் வருகை தந்து வடக்கு மக்களை தாக்கவில்லை. நாடு அவ்வாறே சென்றது. டக்ளஸ் தேவானந்தாவுக்கு அமைச்சுப் பதவி கிடைத்தது.

2015இல்நாம்மைத்திரிபாலசிறிசேனவுக்குவாக்களிக்குமாறு உங்களிடம்கோரினோம். வடக்குமக்கள்அவ்வாறேசெய்தார்கள். தெற்கு மக்கள் மஹிந்த ராஜபக்சவுக்கு வாக்களித்தார்கள். அதன் பின்னரும் எதுவும் நடைபெறவில்லை.

2019இல் சிங்கள மக்கள் கோட்டாபயவுக்கும், வடக்கு மக்கள் சஜித் பிரேமதாசவுக்கும் வாக்களித்தார்கள். கோட்டாபய வெற்றி பெற்றதன் பின்னர் படையெடுத்து வடக்குக்கு வருகை தந்தாரா? எதுவும் நடைபெறவில்லை” என்றார் ரணில். அதாவது சிங்கள மக்கள் எந்தவித எதிர்வினையும் ஆற்றாதபோது அநுரகுமார அவர்களை வன்முறையாளர்கள் போன்று சித்தரிக்க முயற்சி செய்துள்ளார் என்பதே ரணிலின் குற்றச்சாட்டு. அதற்காகவே அநுர மன்னிப்–புக் கேட்கவேண்டும் என்கிறார்.

அதாவது, கருத்துக்களால் அநுர தமிழ் மக்களைத் துன்புறுத்தியதற்காக மன்னிப்புக் கேட்கவேண்டும் என்கிறார். ஆனால், யாழ்ப்பாண நூலக எரிப்பு, 1983 இனக்கலவரம், அதன் பின்னர் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட போர்கள் என்று தமிழ் மக்களைத் திட்டமிட்டுக் கொன்றொழித்ததில் கணிசமான பங்கைக் கொண்டிருக்கின்றது அவரது ஐக்கிய தேசியக் கட்சி. ஆனால், இதுவரையில் இவற்றில் எதற்காகவும் அவர் தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்டதில்லை. இனியும் கேட்கும் எண்ணமில்லை. அப்படிப்பட்ட ஒரு மனிதர் மற்றைய வேட்பாளரின் கருத்துக்காக அவர் மன்னிப்புக் கேட்கவேண்டும் என்று கூறுவதற்கான தார்மீகத் தகுதி உடையவரா? மக்கள் சிந்திக்கவேண்டும்.



## புறமுதுகிட்டு ஓடுவது சரியா?

**ஸ்ரீதுரை**

கலை, இலக்கியம், விஞ்ஞானம், விளையாட்டு, அரசியல் என்று பல்வேறுபட்ட துறைகளில் சாதனை படைத்து கதாநாயக மதிப்பைப் பெறுபவர்களுக்கு மட்டுமின்றி, சாதாரண மனிதர்களுக்கும் இந்த பூமி சொந்தமானது. இவ்வுலகில் பிறக்கின்ற அனைவருமே ஏதோ ஒரு காரணத்துக்காகத்தான் பிறக்கின்றனர்.

நம்மில் ஒவ்வொருடைய ஆயுளும் முடிகின்ற நேரம் வரும் வரையில் நாம் சந்திக்கின்ற இன்ப துன்பங்கள் அத்தனையையும் இயல்பாக எதிர்கொண்டு வாழ்வதே நமக்குக் கிடைத்துள்ள ஆறாவது அறிவுக்கு நாம் செய்யக்கூடிய மரியாதையாகும். அதை விடுத்து, அவசரகதியில் உயிரை மாய்த்துக் கொள்ளும் முடிவினை நாடுவது எவ்விதத்திலும் ஏற்கத்தக்கதல்ல.

ஒருவரைத் தற்கொலை செய்துகொள்ளத் தூண்டுகின்ற புறக்காரணம் யாராகவும், எதுவாகவும் இருக்கலாம். ஆனால், தற்கொலை செய்து கொள்வதற்கான அகக்காரணம் என்பது ஒன்றே ஒன்றாகத்தான் இருக்க முடியும்.

பிரச்சினைகளை எதிர்கொள்ள அஞ்சுகின்ற பலவீனமான மனம் என்பதே ஒருவர் தற்கொலை முடிவை நாடுவதற்கான அகக்காரணமமாகும். அத்தகையபலவீனமானமனம்தற்காலத்தின்இளம் தலைமுறையினரிடம்அதிகமாகக்காணப்படுவது உண்மையிலேயேகவலைக்குரியது. ஆசிரியர்கள் கண்டித்தல், பரீட்சையில் வெற்றி பெறாதது, தொலைக்காட்சியைப் பார்க்க, கைப்பேசியைப் பயன்படுத்தபெற்றோரால்அனுமதி மறுக்கப்படல், போட்டித் தேர்வுகளில் தோல்வியுறுதல், விரும்பிய காதல் கைகூடாதுபோதல் போன்ற காரணங்களால் தற்கொலை ஒன்றே முடிவு என்று நினைக்கும் இளம்பருவத்தினரின் எண்ணிக்கை தற்காலத்தில் அதிகரித்து வருவது கண்கூடு.

விடலைப்பருவத்தினர்என்றுஅழைக்கப்படும் பதின்வயதினர் தேர்வு, காதல் போன்றவற்றில் ஏற்படும் தோல்விகளை எதிர்கொள்ளும் மனப்பக்குவம் குறைந்தவர்களாக இருப்பதை ஓரளவு மனம் ஏற்கும்.

பிறருடைய உடல்நலம், மனநலம் ஆகியவற்றிற்குவழிகாட்டக்கூடியமருத்துவப்பட்டப்ப டிப்பினை கற்கும் மாணவர்களேகூட கடந்த காலங்களில் தற்கொலை செய்துகொண்டி ருக்கிறார்கள். ஒருவர் தமது பிரச்னைகளுக்குத் தற்கொலைதீர்வுஎன்றமுடிவுக்குத்தள்ளப்படுவது கொடிய வேதனையாகும்.

மருத்துவப் படிப்பு என்ற குறிக்கோளைக் கைக்கொண்ட ஒரு மாணவர் அல்லது மாணவி தமது பாடசாலைப் படிப்பிலிருந்தே அதற்கான முன்தயாரிப்பில் ஈடுபடத் தொடங்கிவிடுவர் என்பதே உண்மை.

கடினமான அறிவியல் பாடங்கள், பாடசாலை நேரத்தைத் தாண்டியும் பலமணி நேரம் நீடிக்கும் பயிற்சி வகுப்புகள், உயர்தர வகுப்பு இறுதித் தேர்வு, என இடைவிடாத படிப்பு என்று பலவிதமான சிரமங்களை எதிர்கொண்ட பிறகே ஒருவர் மருத்துவக் கல்லூரியில் இடம்பிடிக்கிறார்.

பின்னர் மருத்துவப் படிப்புக்குள்ள தனியான சவால்களையும் அவர் எதிர்கொள்ளவேண்டும். ஒவ்வொரு நிலையிலும் மருத்துவ மாணவர்கள் படபடப்பையும் மன உளைச்சலையும் சந்திக்கக் கூடியவர்களே.

மருத்துவப்படிப்பினூடேபல்வேறுநோய்களின் தாக்கத்தால் அல்லல்படும் நோயாளிகளைச் சந்திப்பதும்மருத்தவமாணவர்களின்கடமைகளில் ஒன்றாகும். நோய்நொடிகளாலும் தாங்க முடியாத வலியினாலும் அவதிப்படுவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவாக உள்ள இளம் வயதினராகிய மருத்துவ மாணவர்கள் அத்தகைய அவதிக்கு உள்ளான நோயாளிகளை அதிக அளவில் சந்திக்க நேர்வதுகூட ஒருவித மன அழுத்தத்தைத் தரக் கூடியதுதான்.

தங்களின் பதின்வயதுகளிலிருந்தே மன அழுத்தத்தைத் தரக்கூடிய பல்வேறு சந்தர்ப்பங் களையெல்லாம்வெற்றிகரமாகக்கடந்துவந்துள்ள மருத்துவ மாணவி ஒருவர் தமது பட்டப்படிப்பின் கடைசி வருடத்தில் தற்கொலையே தீர்வு என்ற முடிவுக்குச் சென்றது வருத்தற்குரியதே.

மிகவும் முக்கியமான அந்தத் தருணத்தில் தங்களின் அன்புக்குரிய பெற்றோர்களையும், ஏனைய உறவினர்களையும், நெருங்கிய நண்பர்களையும்வருத்தத்தில்ஆழ்த்தவேண்டுமா என்பதைச் சற்றே நினைத்துப் பார்த்தாலும் இத்தகைய முடிவிலிருந்து பின்வாங்கி, பிரச்னைகளை எவ்வாறு எதிர்கொள் ளலாம் என்ற மனத் தெளிவைப் பெற்றிருக்கலாம்.

தற்கொலைசெய்துகொள்ளும்ஒவ்வொருவரும் தங்கள் வாழ்வில் மேன்மேலும் ஒளிவீசும் வாய்ப்பை இழப்பதுடன், தங்களின் சொந்த பந்தங் களையும்,நட்புகளையும்தீராதவருத்தத்தில்ஆழ்த்தி விடுகின்றனர்.

அகால சாவெய்துவோர் ‘தங்களுக்கென விதிக்கப்பட்ட ஆயுட்காலம்’ முடிவடையும் வரையில் துன்பமயமான வேற்றுலகம் ஒன்றில் காலம் கழிப்பதாக ஒரு பழையகால நம்பிக்கை உண்டு. இதனைநம்புவதும்நம்பாததும்அவரவர் விருப்பம். ஆனால், அவ்வாறு உயிரிழந்தோர் இவ்வுலகில் விட்டுப் பிரியும் உறவினரும், நட்பு வட்டத்திலுள்ளவர்களும் நீண்ட காலம் சோகக் கடலில் ஆழ்ந்திருப்பர் என்பது மட்டும் உண்மை.

வாழ்க்கை என்பது ஒரு போர்க்களம். அந்தப் போர்க்களத்தில் சற்றே பின்வாங்கி, பிறகு போரிட முயற்சிக்கலாம். அம்முயற்சியில் தோற்றாலும் பரவாயில்லை. ஆனால், புறமுதுகிட்டு ஓடுவது மட்டும் கூடாது.

போர்க்களத்திலிருந்து புறமுதுகிட்டு ஓடுபவர்களையும்,தற்கொலைசெய்துகொள்வதன் மூலம் வாழ்க்கைக் களத்திலிருந்து விலகிச் செல்பவர்களையும் வரலாறு ஒருபொழுதும் போற்றுவதில்லை என்பதை மட்டும் நினைவில் கொண்டால் யாருடைய மனதிலும் தற்கொலை செய்துகொள்ளும் எண்ணமே உருவாகாது என்பது நிச்சயம்.

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கை சுங்கத் திணைக்களம் வருமான வரலாற்றில் 1000 பில்லியன் ரூபா ஈட்டியது

எந்தவொருதரப்பிற்கும்அடிபணியாமல்சுயாதீனமாக செயற்படஇலங்கைசுங்கதிணைக்களத்தின்கட்டுப்பாட்டு அதிகார சபைக்கும் அதன் அதிகாரிகளுக்கும் சந்தர்ப்பம் வழங்கியதன் மூலம் வரலாற்றில் முதல் தடவையாக இவ்வருடத்தின் 08 மாதங்களில் 1000 பில்லியன் ரூபாவை சுங்க வருமானமாக ஈட்ட முடிந்துள்ளது.

2024 ஆம் ஆண்டிற்காக சர்வதேச நாணய நிதியம் 1534 பில்லியன் ரூபாவை வருமான இலக்காக நிர்ணயித்துள்ளது. ஆனால் 2024ஆம் ஆண்டின் 08 மாத நிறைவில் 1000 பில்லியன் வருமான இலக்கை எட்டியிருப்பதால், வருடத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடுத்த 04 மாதங்களில் எட்ட முடியும் என சுங்கப் பணிப்பாளர் நாயகம் சரத் நோனிஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

வரலாற்றில் இதற்கு முன்னர் 2023 ஆம் ஆண்டு அதிக வருமானம் கிடைத்ததாகவும், அந்த வருடத்தின் மொத்த சுங்க வருமானம் 975 பில்லியன் ரூபா என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதுவரையில் மொத்த சுங்க வருமானத்தில் 25 வீத - 30 வீத வாகன இறக்குமதியில் பதிவு செய்யப்படும் என்றும், இந்த இரண்டு வருடங்களிலும் வாகனங்கள் இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டதால் அந்த எண்ணிக்கை 6வீதத்துக்கும் குறைவாக இருப்பதாகவும் சரத் நோனிஸ் சுட்டிக்காட்டினார்.

நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இராஜாங்க அமைச்சர்களான ரஞ்சித் சியம்பலாபிட்டிய, ஷெஹான் சேமசிங்க ஆகியோரின் தலைமைத்துவமும், சுதந்திரமாக செயலாற்ற கிடைத்தமையுமே இந்த இலக்கை அடைய வழி ஏற்பட்டதாகவும் சுங்கப் பணிப்பாளர் தெரிவித்தார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில், சுங்கத் திணைக்களத்தில் பல சாதகமான மாற்றங்கள் செய்யப் பட்டுள்ளன. மேலும், அனைத்து அதிகாரிகளுக்கும் புதிய முறைகள் மற்றும் தொழில்நுட்ப செயற்பாட்டுகள் மூலம் அவர்களின் செயற்பாட்டை எளிதாக்க முடிந்தது. - என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

சுங்கக் கட்டமைப்புக்குள் காணப்பட்ட மோசடி மற்றும் ஊழலை ஒழிப்பதற்கும், கடத்தலை முற்றாக நிறுத்துவதற்கும் சுங்க ஊழியர்கள் வழங்கிய பங்களிப்பும் பெரும் உதவியாக அமைந்திருந்தாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நிர்வாகச் செயல்பாடுகள், இடமாற்றங்கள் மற்றும் முழு சுங்க நிர்வாக நடைமுறைகளையும் முறையாகச் செயல்படுத்துவதற்கும், வருடாந்த செயல்திட்டத்தின் கீழ் முழு சுங்கத் துறையின் தரநிலை மாற்றங்களுடன் நிர்வாகச்செயற்பாடுகளைமுன்னெடுத்துச்செல்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(05)





# திடீரென தீப்பிடித்த மூன்று வாகனங்கள்

## பாதுக்கையில் சம்பவம்



பாதுக்க, மாஹிங்கல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வான், கெப் வாகனம் மற்றும் ஓட்டோ என்பன திடீரென தீப்பிடித்து எரிந்துள்ளன என பாதுக்கை பொலிஸார் தெரிவித்தனர்.

ஹொரணை நகரசபையின் தீயணைப்பு பிரிவினர் இணைந்து இந்த தீயை அணைக்க முயற்சித்துள்ளனர் எனவும், அதற்குள் மூன்று வாகனங்களும் தீயில் எரிந்து நாசமாகியிருந்தன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வீட்டை சுற்றியுள்ள காணி பகுதிக்குள் வெளிநபர்கள் எவரும் நுழைய முடியாது எனவும், இந்த வாகனங்களுக்கு யாராவது தீ வைத்தனரா அல்லது ஒரு வாகனம் தீப்பிடித்து மற்ற வாகனங்களுக்கும் தீ பரவியதா என்பது தொடர்பில் இதுவரை எந்த தகவல்களும் கண்டறியப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பாதுக்கை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.(05)

# மன்னாரில் அரச மருந்து கூட்டுத்தாபனம் ஸ்தாபிக்க முதல் கட்ட நடவடிக்கைகள்

இலங்கைஅரசமருந்துக்கூட்டுத்தாபனத்தின்மன்னார்மாவட்டத்திற்கான கிளையை ஸ்தாபிப்பதற்கான முதல் கட்ட நடவடிக்கை வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள தனியார் மருந்தகங்களில் மருந்துகள் அதிக விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை தொடர்பில் மக்களால்முன்வைக்கப்பட்டமுறைப்பாட்டின்அடிப்படையில்நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மல நாதனின் கோரிக்கைக்கு அமைவாக அரச மருந்து கூட்டுத்தாபனத்தின் கிளையை மன்னாரில் ஆரம்பிப்பதற்கான காணி வெள்ளிக்கிழமை அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

மன்னார் நகரப் பகுதியில் பொதுமக்கள் மிகக் குறைந்த விலையில் மருந்துகளைப் பெற்றுக் கொள்ளும் வகையில் மாவட்ட செயலக வளாகத்தில் குறித்த கிளை ஆரம்பிக்கப்படவுள்ளது.

குறித்த காணியை அளவிட்டு அடையாளப்படுத்தும் முகமாக 'ஒசுசல அதிகாரிகள் மற்றும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் , மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப், மன்னார் வைத்தியசாலை பணிப்பாளர் அசாத் எம்.ஹனிபா, மன்னார் நகர சபை செயலாளர் எக்ஸ்.எல்.பிரிட்டோ உள்ளிட்ட குழுவினர் கலந்து கொண்டு காணி அடையாளப்படுத்தல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (05)



காலைக்கதிர் Kalaikkathir

## கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலை பாதுகாப்பு அலுவலர் தொடருந்து மோதி காயம்





யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த யாழ் ராணி ரயில் மோதிய குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது. கணேசபுரம் பகுதியில் பாதுகாப்பற்ற புகையிரத கடவையை கடக்க முற்பட்டபோதே குறித்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது. குறித்த விபத்தில் கிளிநொச்சி உமையாள்புரத்தைச்சேர்ந்த 58 வயதான சுப்பையா சாந்தகுமார் என்பரே படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

குறித்த விபத்து தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05-316)

## வசந்தவிடம் இழப்பீடு கேட்கும் மனுஷ நாணயக்கார எம்.பி.

வெளிநாட்டு வேலைகளுக்கு தொழிலாளர்களை அனுப்புவதற்காக கூறி பணம் பெற்றதாக ஆதாரமற்ற அறிக்கைகளை வெளியிட்ட மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த சமரசிங்கவுக்கு எதிராக முன்னாள் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார 500 மில்லியன் ரூபா நட்டஈடு கோரிகடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இஸ்ரயேல் மற்றும் கொரியா ஆகிய நாடுகளுக்கு வேலைகளுக்கு தொழிலாளர்களை அனுப்புவதற்காககையொப்பமிடுவதற்குமனுஷ நாணயக்கார பணம் பெற்றுக்கொள்வதாக வசந்த சமரசிங்க முன்வைத்த கருத்துக்கள், முற்றிலும் பொய்யானது என இந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

தொழில்மற்றும்வெளிநாட்டுவேலைவாய்ப்பு அமைச்சராக மனுஷ நாணயக்கார பொறுப்பில் இருந்த போது அதிகளவானோர் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக அனுப்பப்பட்டனர் எனவும், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் மத்தியில் வெறுப்புணர்வை ஏற்படுத்தவே இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

பொய்யான அறிக்கைகளை வெளியிட்டு அவதூறு ஏற்படுத்திய குற்றச்சாட்டில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த சமரசிங்கவுக்கு எதிராக 500 மில்லியன் ரூபா நட்டஈடு கோரப்பட்டுள்ளதாகவும், 14 நாள்களுக்குள் நட்டஈடு தொகையை வழங்காவிடின் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் இந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.(05)





## கடுமையான வறட்சியின் காரணமாக பலர் பாதிப்பு

கிளிநொச்சி பாரதிபுரம் பகுதி மற்றும் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவு பகுதிகளில் பல தென்னை செய்கையாளர்கள் வாழை, கமுகு என்பன தற்பொழுது ஏற்பட்டுள்ள கடும் வரட்சி நிலை காரணமாக அழிவடைந்து வருவதாக கவலை தெரிவித்துள்ளனர் தற்பொழுது நாட்டில் தேங்காய்க்கு பெரும் தட்டுப்பாடு நிலவிவரும் நிலையில் தென்னை செய்கை மேற்கொள்ளப்பட்டு எட்டு வருடம் 9 வருடம் கடந்த நிலையில் பயன்தரக் கூடிய நிலையில் இருந்த பலரது தென்னைகள் முற்று முழுதாக அழிவடைந்து வருவதாகவும் வாழைச் செய்கையிலும் வறட்சியால் பாதிப்பு ஏற்பட்டுள்ளதோடு கமுகு போன்றவையும் அழிவடையும் நிலையில்கானப்படுவதாவு பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளனர் மேலும் தெரிவிக்கையில் ஒரு வருடமும் இல்லாதவாறு இவ்வருடம் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளதாகவும் தற்பொழுது தேங்காய் ஒரு கிலோ தேங்காய் 140 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவதாகவும் இந்நிலை தொடருமாயின் தேங்காயை கூட வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்படும். அப்படி இல்லாவிடில் தேங்காய் இல்லாமலே சமைக்க வேண்டிய நிலை ஏற்படும் என தெரிவித்துள்ளனர்.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தென்னை அபிவிருத்திச் சபையினர் கமநலசேவை திணைக்களத்தினர் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும் எனவும் அத்துடன் தொடர்ந்து தென்னைச் செய்கையில் ஈடுபடுவதற்கான உதவிகளை புரிய வேண்டும் என விவசாயிகள் தெரிவித்தனர். (05-113)

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



# ரணில் விக்ரமசிங்கவின் வெற்றியிலேயே நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளதாம்

ரணில் விக்ரமசிங்கவின் வெற்றியிலேயே நாட்டின் எதிர்காலம் தங்கி இருக்கிறது. அதனால் அவரை வெற்றிபெறச்செய்ய ஐக்கிய தேசிய கட்சி அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் உப தலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

சிறிகொத்த கட்சி தலைமையகத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஐக்கிய தேசிய கட்சியின் 78ஆவது ஆண்டு நிறைவுவிழாவில் கலந்துகெபண்டு உரையாற்றும் போதே அகிலவிராஜ் காரியவசம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்-

1946 இல் பாம்கோட் மாளிகையில் ஆரம்பிக்கப்பட்ட ஐக்கிய தேசிய கட்சி, மிகவும் பலம்மிக்க பல வேலைத்திட்டங்களை இந்த நாட்டுக்கு செய்திருக்கிறது. ஐக்கிய தேசிய கட்சி வீழ்ச்சியடைந்தால் நாடும் வீழ்ச்சியடைகிறது.

ஐக்கிய தேசிய கட்சி எழுந்து நின்றால் நாடும் அபிவிருத்தியடைகிறது. 1970 இல் ஐக்கிய தேசிய கட்சி வீழ்ச்சியடைந்தது. நாடு வீழ்ச்சியடைந்தது. 1977 இல் ஐக்கிய தேசிய கட்சி அதிகாரத்துக்கு வந்தபோது நாடு முன்னேற்றமடைந்தது.

அதேபோன்று 1994 இல் ஐக்கிய தேசிய கட்சி வீழ்ச்சியடைந்தபோது, 2001 இல் அரசாங்கம் வீழ்ச்சியடைந்து மறை பொருளாதாரமே இருந்தது.

2001 இல் அரசாங்கத்தை பெற்றுக்கொண்டு நேர் பொருளாதாரமாக மாற்றி நாட்டை பலப்படுத்தியது. வீழ்ச்சியடைந்திருந்த நாட்டை 2015 இல் மீண்டும் ஐக்கிய தேசிய கட்சி பலப்படுத்தியது.

2022ல் நாடு வீழ்ச்சியடைந்தது. ஐக்கிய தேசிய கட்சியும் வீழ்ச்சியடைந்தது. மீண்டும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் நாட்டை பொறுப்பேற்றபோது நாடு மீண்டும் அபிவிருத்தியடைய தொடங்கியது. அதனால் ஐக்கிய தேசிய கட்சி நாட்டுக்கு செய்ய சேவைகள் அளப்பரியனவாகும்.

ஐக்கிய தேசிய கட்சி எப்போதும் ஒரு கொள்கையுடன் செயற்பட்டுவரும் கட்சியாகும். அதனாலே ஐக்கிய தேசிய



கட்சியின் தலைவர் நாடாளுமன்றத்தில் ஓர் ஆசனத்துடன் இருந்து நாட்டின் ஜனாதிபதியாகி, அவரின் வேலைத்திட்டத்தின் மூலம் நாடு ஸ்திர நிலைக்கு வந்திருக்கிறது.

அதனால் ஐக்கிய தேசிய கட்சி புது வடிவம் பெற்று, புதியவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கி முன்னுக்கு வந்த கட்சியாகும்.

இன்று ரணில் விக்ரமசிங்க வீழ்ச்சியடைந்த நாட்டின் பொறுப்பை சுமந்து, ஓரளவு முன்னுக்கு கொண்டுவந்துள்ளார். தேர்தலில் அவர் சுயாதீன வேட்பாளராக போட்டியிடுகிறார்.

அதனால் ரணில் விக்ரமசிங்கவை வெற்றிபெறச்செய்வதற்கு தேவையான சக்தியையும் தைரியத்தையும் கொடுத்து அர்ப்பணிப்புடன் செயற்படுவது எமது அனைவரதும் பொறுப்பாகும்.

ரணில் விக்ரமசிங்க வெற்றிபெற்றால் மாத்திரமே இந்த நாட்டுக்கு எதிர்காலம் இருக்கிறது. நாட்டை கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டம் அவரிடம் மாத்திரமே இருக்கிறது. - என்றார்.(05)





# தமிழ்ப் பொது வேட்பாளருக்கான பரப்புரை நடவடிக்கைகள் தீவிரம்

தமிழ் பொது வேட்பாளருக்கான பரப்புரை அறிக்கைகள் விநியோகிக்கும் நடவடிக்கைகள் நேற்று வடமராட்சி கிழக்கிலும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

சங்கு சின்னத்தில் போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர் அரியநேத்திரனை ஆதரித்து வடமராட்சி கிழக்கு தாளையடி பகுதியில் வெள்ளிக்கிழமை பிரசார நடவடிக்கைகள் இடம்பெற்றன.

இதன்போது தமிழ் பொது வேட்பாளருக்கான ஆதரவு மக்களிடையே பெருகிவருவதாக தெரிவித்த முன்னாள் பிரதேசசபை உறுப்பினரும் ஜனநாயக போராளிகள் கட்சியை சேர்ந்தவருமான ஆனந்தராசா சுரேஷ்குமார், தமிழ் மக்கள் ஓரணியில் திரண்டு பொது வேட்பாளருக்கு அமோக ஆதரவை வழங்கவேண்டும் எனவும் தமிழ் மக்களைக் கேட்டுக்கொண்டார்.

இதில் ஜனநாயக போராளிகள், கட்சி நிர்வாகிகள், உறுப்பினர்கள், முன்னாள் பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர்கள், மணல்காடு கிராம அபிவிருத்தி சங்க தலைவர், தாளையடி கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்க செயலாளர் என பலரும் கலந்துகொண்டனர்.(05)

# தபால்மூல வாக்களிப்பு வாக்குச்சீட்டை புகைப்படம் எடுத்து சமூக ஊடகங்களில் பகிர்ந்தவருக்கு எதிராக முறைப்பாடு!

தபால் மூல வாக்களிப்பின் போது வாக்குச் சீட்டை புகைப்படம் எடுத்து சமூக ஊடகங்களில் பகிர்ந்த அரசியல்வாதிக்கு எதிராக வவுனியா உதவி தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் அரச ஊழியர்களுக்கான தபால் மூல வாக்களிப்பு நிலையத்தில் வாக்குச் சீட்டை புகைப்படம் எடுத்ததாக அரசியல் கட்சி ஒன்றின் மத்திய குழு உறுப்பினர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாக சிங்கள நாழில் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த வாக்குச் சீட்டில் தமிழ்த் பொது வேட்பாளருக்கு ஆதரவாக அடையாளம் இடப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கும் அறிவிக்கப்பட்ட நிலையில், சம்பவம் குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். சம்பவம் இடம்பெற்ற பிரதேசம் தொடர்பான விவரங்கள் வெளியாகவில்லை.

(05)



காலைக்கதிர்
Kalaikkathir

## அநுர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அச்சுறுத்த முடியும்? அவர் ஒருபோதும் வெற்றிபெறப்போவதில்லை. அவர் வடக்கு மக்களை மட்டுமல்ல தெற்கு சிங்கள மக்களையும் அச்சப்படுத்துவதற்கே முயல்கின்றார். அதுதான் ஜே.வி.பி.யின் முறைமையாகும்.

அநுரகுமார திசாநாயக்க உடனடியாக வடக்கு மக்களிடத்தில் மன்னிப்புக்கோர வேண்டும் என்று நான் பகிரங்கமாகக் கோருகின்றேன். அதுமட்டுமன்றி சிங்கள மக்களின் பெயரைப் பாயன்படுத்தி அவர்களுக்குகளங்கம்ஏற்படுத்தியமைக்காவும் அவர்களிடத்திலும்மன்னிப்புக்கோரவேண்டும் என்றும் நான் வலியுறுத்துகின்றேன்.

அதன் பின்னர் அவரை எதிர்க்கட் சியில் அமர்ந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவருக்கு வேறு எங்கு செல்வது? ஆவரால் யாழ்ப்பாணத்துக்குக்கூட வரமுடியாதுபோகும். ஜே.வி.பி. முறையிலான அச்சுறுத்தல் விடுப்பது மிகமோசமானது என்று மீண்டும் கூறுகின்றேன்.

ஜே.வி.பியின்வழக்கமானஅச்சுறுத்தலுக்கு இதற்கு முன்னதாக அச்சப்பட்டவில்லை. இனிமேலும் அச்சப்படப்போவதுமில்லை. இடமளிக்கப்போவதுமில்லை.

சஜித் பிரேமதாசவைப் பற்றிப் பேசிப் பயனில்லை. சஜித் பிரேமதாச எதிர்க்கட்சித் தலைவராக சரியாக பணியாற்றியிருந்தால் அநுரகுமார மேலெழுந்து வந்திருக்கமாட்டார் அல்லவா? அநுரவை நிறுத்துவதற்கு சஜித்தால் முடியாது. அதேநேரம் வாக்குகளை வீணக்க வேண்டாம் என்றும் சஜித்திடம் கேட்டுக்கொள்கின்றேன்.

அவர் மேடையில் ஏறிய நேரத்திலிருந்து பேசிக்கொண்டே இருக்கின்றார். அதனால் எவ்விதமான பயனுமில்லை. எமக்குள்ள ஒரேநோக்கம் இந்த நாட்டை முன்னேற்றி முன்னோக்கிச் செல்வதாகும். அதற்காக இருக்கும் ஒரேதெரிவு சிலிண்டருக்கு புள்ள டியிடுவதாகும். அவ்வாறு புள்ளடியிடவில்லை என்றால், எரிவாயுமில்லை. அபிவிருத்தியுமில்லை என்றார்.

## வாக்களிப்பைப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிப்பவர்களுக்கும்கும்பலைக்கட்டுப்படுத்துவதற்கும் பொலிஸாருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் இது போன்ற பிரச்சினைகளை ஏற்படுத்துபவர்களை உடனடியாக கைது செய்யுமாறு பொலிஸாருக்கு தேர்தல் ஆணையகம் அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர்நாடுமுழுவதும்சட்டவிரோததுப்பாக்கிகள்மற்றும்பாதாளஉலகக்கும்பல்களைகைது செய்வதற்கான விசேட நடவடிக்கையொன்று அமுல்படுத்தப்ப டவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்காகவிசேடபுலனாய்வுக்குழுக்களும் ஈடுபடுத்தப்படவுள்ளதாகஅமைச்சின்பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். நாடு முழுவதும் சுமார் 2 லட்சம் சட்டவிரோத துப்பாக்கிகள் இருப்பதாக பாதுகாப்புப் படையினர் மதிப்பிட்டுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ளது ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்ற வாக்காளர்களின் எண்ணிக்கை ஒரு கோடியே எழுபது இலட்சம். இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க சுமார் பத்து இலட்சம் வாக்காளர்கள் இணைந்துள்ளதாக ஆணைக்குழுவட்டாரங்கள்தெரிவிக்கின்றன.

## தென்னக்கோனுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர் நீதிமன்றம், தேசபந்து தென்னகோன் பொலிஸ் மா அதிபராகக் கடமையாற்றுவதை இடைநிறுத்த இடைக்கால உத்தரவு பிறப்பித்தமை இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த உத்தரவின் காரணமாக, செப்டெம்பர் 21நடைபெறவுள்ளஜனாதிபதித்தேர்தலுக்கான நடவடிக்கைகளைமுன்னெடுப்பதற்குத்தேர்தல் ஆணைக்குழுவினால்பொலிஸ்மாஅதிபருக்கு உத்தரவுகளை வழங்க முடியாதிருப்பதாக சுட்டிக்காட்டியுள்ள இடைக்கால மனுதாரர்கள், தேசபந்து தென்னகோன் பதில் பொலிஸ் மா அதிபராக கடமையாற்றியபோது 'யுக்திய' என்ற பெயரில் போதைப்பொருள் ஒழிப்புக்கானநடவடிக்கையைவெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் செயற்றிறன்மிக்க பொலிஸ் மா அதிபர் எனவும் மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

## 1,300 மில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

குருநாகல் மாவட்டத்தின் பானகமுவ, பறகஹதெனிய, மல்லவப்பிட்டிய, பந்தாவ மற்றும் சியாம்பலாகஸ்கொடுவ ஆகிய பிரதேசங்களில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பொதுக்கூட்டங்களில் கருத்துத் தெரிவித்தபோதே, அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒன்லைன் விசா மோசடியில் 1300 பில்லியன் டொலரை பொக்கற்றுக்குள் புகுத்த முயன்ற மனுஷ நாணயக்காரவின் மோசடி முயற்சிகள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம் மற்றும் சுமந்திரன் ஆகியோர் நீதிமன்றத்தை நாடியதால் இம்மோசடி தவிர்க்கப்பட்டது.

புற்றுநோய்மருந்துகளில்கலப்படம்செய்து, அதிக பணம் ஈட்டிய முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தண்டிக்கப்பட்டு சிறையில்அடைக்கப்பட்டுள்ளார்.இதற்குஎதிராக மக்களும் அரச சார்பற்ற நிறுவனங்களுமே போராட்டம் செய்தன. ஆனால், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இவற்றைத் தடுக்காமல், தனது அமைச்சரவையை பாதுகாத்தார். கள்வர்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்தும் திராணி ரணிலிடம் இல்லை.

நிறைவேற்றதிகார ஜனாதிபதியால்தான் ஊழல் மற்றும் மோசடிகளைத் தடுக்க முடியும் எனக் கூறும் தேசிய மக்கள் சக்தி, இதைத் தெரிந்துகொள்ளவேண்டும். நாட்டில் ஊழலை ஒழிப்பதாகக் கூறும் அனுரகுமார திஸாநாயக்க, இந்த ஊழல்வாதிகளுக்கு எதிராக, நீதிமன்றம் செல்லாதது ஏன்? தவறை தண்டிப்பதற்கு அதிகாரம்தான் தேவை என்பதில்லை. இளைஞர்களைத் திசை திருப்புவதற்கு கையாளும் தந்திரங்களாகவே ஜே.வி.பியின் கவர்ச்சிகரமான பரப்புரைகள் உள்ளன.

ஒரு தடவையாவது அதிகாரத்தை ஒப்படைக்குமாறு கோர இவர்களிடம் எந்த அருகதையும் இல்லை. அனுபவமற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆட்சியதிகாரத்துக்கு அவசரப்படுவதேன்? கோட்டாவின் காலத்தில் நிகழ்ந்தவற்றை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

ஹர்ஷ டி சில்வா, எரான் விக்ரமரட்ன மற்றும் கபீர் ஹாஸிம் போன்ற பொருளாதார முனைவர்கள் எங்களது அணியிலேயே உள்ளனர்.

ஏழ்மைக் குடும்பத்தில் பிறந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் புதல்வரான சஜித், ஏழைகளின் துயரங்களைத் தெரிந்தவர். அவரது தந்தையாரின் அத்தனை குணங்களும் ஆளுமைகளும் சஜித்திடம் உள்ளன. சிறுபான்மைச் சமூகங்களின் பாதுகாப்பை சஜித் பிரேமதாசவின் ஆட்சியே உறுதி செய்யும் - என்றார்.

## இணைய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அண்மைய நாட்களில், நாடு முழுவதும் இணையவழியில் நிதி மோசடி செய்யும் சம்பவங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதோடு அச்சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் அதிகமானவர்கள் சீனர்கள்.

சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ள நபர்களின் மடிக்கணினிகள் மற்றும் தொலைபேசியில் உள்ள தரவுகள் சீன மொழியில் இருப்பதால் மேலதிக விசாரணைகளை முன்னெடுப்பதற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு நெருக்கடியான நிலைமைகள் ஏற்பட்டிருந்தன.

இப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில், வெளிவிவகார அமைச்சின் ஒத்துழைப்புடன்பொலிஸார்சீனாவின்விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் உதவியை நாடியிருந்தனர். இதனையடுத்து குறித்த விசாரணைகளுக்குத்தேவையானஆதரவை வழங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளனர்.

இதனையடுத்து, சீன விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த 10 அதிகாரிகள் வருகை தந்துள்ளதோடு இலங்கைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து செயற்பட ஆரம்பித்துள்ளனர்.

கடந்த ஜூன் வரையிலான காலப்பகுதி வரையில், இலங்கையில் இணையவழித் தளங்கள் மூலம் நிதி மோசடி செய்தமை குறித்து சீன மற்றும் இந்திய பிரஜைகள் குழுவினர் கைது செய்யப்பட்டனர்.

அக்குழுவில் 31 சீன பிரஜைகள் உட்பட மொத்தம் 137 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதோடு சந்தேகநபர்கள் சிலரிடமிருந்து 158 கையடக்கத் தொலைபேசிகள், 16 மடிக்கணினிகள் மற்றும் 60 சாதாரண கணினிகள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜெனிவா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் மனிதாபிமான நிலைமைகள் தொடர்பாக கலந்துரையாடப்படும் பக்க நிகழ்வொன்றுக்கும் ஏற்பாடாகியுள்ளது.

இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான நிலைமைகள் சம்பந்தமாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் எழுத்து மூலமாக விரிவான அறிக்கை ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள நிலையில் அதனை அடிப்படையாக வைத்து, முதன்நாளில் விவாதம் நடைபெறவுள்ளது.

அத்துடன், இந்தக் கூட்டத்தொடரில், இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்டுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவை தீர்மானத்தின் ஆயுட்காலம் நிறைவுக்கு வரவுள்ள நிலையில் அடுத்தகட்டமாக ஐக்கிய நாடுகள் மனிதஉரிமைகள்பேரவையானதுஎத்தகைய நகர்வை முன்னெடுக்கப் போகிறது என்பதில் உத்தியோக பூர்வமான நிலைப்பாடுகள் எவையும் வெளியிடப்படவில்லை.

## அநுர வென்றால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்வோம்.

செப்டம்பர் 3 நாடாளுமன்றம் கூடியது. 150-க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் பங்கேற்ற நாடாளுமன்றத்தின் கடைசி கூட்டத்தொடராக அதுதான் இருக்கும்.நான் வெற்றி பெற்றால் திட்டமிட்டபடி ஒக்டோபர் 8 நாடாளுமன்றத்தைக்கூட்டமாட்டேன். பொதுத் தேர்தலுக்குப் பிறகுதான் நாடாளுமன்றம் கூட்டப்படும்.

எமது வெற்றி குறித்து எதிர்க் கட்சியினர் ஆத்திரமடைந்துள்ளனர். தற்போது தமது மோசமான தோல்வியை எவ்வாறு தவிர்ப்பது என அவர்கள் திட்டமிட்டு வருகின்றனர்

## தமிழ் சிவில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் நிலைப்பாட்டில் உள்ள கட்சிகள் மற்றும் தமிழ் சிவில் அமைப்புக்கள் ஒற்றுமையாக ஒன்றிணைந்து தமிழ்ப் பொதுக்கட்டமைப்பு என்ற அமைப்பொன்றை உருவாக்கித்தமிழ்மக்களின்அபிலாசைகளை வெளிப்படுத்துவதற்காக சங்குச் சின்னத்தில் பாக்கியசெல்வம் அரியநேத்திரனை தமிழ்ப் பொது வேட்பாளராக நிறுத்தியுள்ளோம்.

காலங்காலமாகச் சிங்களப் பேரினவாதத்தின் இனவழிப்பை எதிர்கொண்டு போராடி வருகின்ற தமிழ்த் தேசம் தனது உயிரினும் மேலாகக் கருதி வரும் தேசிய அபிலாசைகளை வெளிப்படுத்துவதற்கான ஒருவாய்ப்பாக வரவிருக்கின்ற தேர்தலைப் பயன்படுத்துவதற்காகதேர்தலில்எம்மால்முன்மொழியப்பட்டுள்ள அரியநேத்திரன் அவர்களுக்கு எமது வாக்குகளை வழங்கவேண்டும் என தமிழ் சிவில் சமூக அமையத்தினராகிய நாம்பணிவன்புரிமையுடன்தமிழ்மக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

1982 முதல் இன்றுவரை இலங்கையில் நடைபெற்ற சனாதிபதித் தேர்தல்கள் எல்லாம் சிங்கள-பௌத்த பேரினவாதத் தலைவரைத் தேரந்தெடுப்பதாகவே அமைந்தன. இத் தேர்தல்களில் தமிழ் மக்கள் ஆதரவளித்த, தென்னிலங்கையின் பிரதான அரசியற் கட்சிகளைச் சேர்ந்த சிங்கள வேட்பாளர்கள் கூட தமிழ் மக்களின் அபிலாசைகளை ஏற்றுக் கொண்டதுமில்லை, தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்ற சனாதிபதிகளும் தமிழ் மக்களுக்கு எதிரான இனவழிப்பு நடவடிக்கைகளைக் கைவிட்டதுமில்லை. அதனால் இனிவரும் சனாதிபதித் தேர்தல்களிலும் வழமைபோல் தென்னிலங்கையின் பிரதான அரசியற் கட்சிகளைச் சேர்ந்த சிங்கள வேட்பாளர் ஒருவருக்கு வாக்களிப்பதில் எமக்கு எந்த ஒரு மாற்றமும் ஏற்படப்போவதில்லை என்பதே வரலாறு எமக்குத் தரும் வழிகாட்டலாகும்.

எனவேதான் இம்முறை நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலைத் தமிழ் தேசத்தின் அரசியல் நிலைப்பாடு தொடர்பான தமிழ் மக்களின் தெளிவான ஆணை ஒன்றைச் சர்வதேசத்திற்கும் சிங்கள மக்களுக்கும் வெளிப்படுத்தும் வகையிலான தேர்தலாக மாற்றிப் பயன்படுத்தும் நோக்கில் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தும் கூட்டு முயற்சியில் தமிழ் சிவில் சமூக அமையமும் இணைந்து கொண்டது.

சங்குச் சின்னத்தில் போட்டியிடும் தமிழ்ப்பொது வேட்பாளரான திரு அரிய நேத்திரனுக்கு அளிக்கப்படும் வாக்குகள் ஒரு தனி நபருக்கான வாக்குகள் எனக் கருதாமல், அவ்வாக்குகள் தமிழர்களின் அரசியல் நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதற்கான வாக்குகளே என்ற புரிதலின் அடிப்படையிலேயே பொது வேட்பாளர் எனும் இச்செயற்திட்டத்தில் நாம் இணைந்து கொண்டோம்.

எமது பொது வேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கப்படும் வேளையில், ஒற்றையாட்சியைத் தமிழ் மக்களால் தீர்வாக ஆராயவும் முடியாது எனக்கூறியது போல, 13ம் திருத்தத்தையும் தீர்வொன்றின் அடிப்படையாகக்கூட ஏற்க முடியாது என

தொடர்ச்சி 9ம் பக்கம்....



காலைக்கதிர் Kalaikkathir

## தமிழ் சிவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிப்படையாக நிராகரிக்க வேண்டும் என தமிழ் சிவில் சமூக அமையத்தினராகிய நாம் எப்போதும் போல உறுதியாகக் கோரியிருந்தோம்.

எனினும் பல்வேறு பங்கீடுபாட்டாளர்கள் ஒன்றிணைந்து தயாரித்த கூட்டு ஆவணம் என்ற அடிப்படையில் எமது கருத்துக்கள் அனைத்தும் முழுமையாகவும், நாம் விரும்பிய மொழிப் பிரயோகத்திலும் உள்ளடக்கப் பட முடியாத யதார்த்த சூழ்நிலையையும் நாம் கருத்திற் கொள்கிறோம்.

இத்தகைய பின்னணியில், தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பான எமது விரிவான வாசிப்பையும் நிலைப்பாட்டையும், பின்வரும் விடயங்கள் தொடர்பிற் பகிர்ந்துகொள்ள விரும்புகிறோம்.

1. அரசியற் தீர்வின் பகுதியாக உருவாக்கப்படும் புதிய அரசியலமைப்பானது ஒரு புதிய கூட்டு அரசை இத்தீவில் உருவாக்குவதாக அமைய வேண்டும். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, இறைமை ஆகியவற்றினை ஏற்றுக் கொண்டதன் அடிப்படையில் தேசங்களின் ஒன்றிணைவாக அமையும் அரசாக அது அமைய வேண்டும். அதாவது புதிய அரசானது ஒரு பன்மைத்தேசிய அரசு (ஊடரசஷ்யெவழையெட) என்ற அடிப்படையில் கட்டமைக்கப்பட வேண்டும்.

2. ஒற்றையாட்சி அரசு முறைமையையும் அதனது ஒரு அங்கமான 13ம் திருத்தத்தையும் தமிழ் மக்கள் முற்றாக நிராகரிப்பதோடு, இவை அரசியற் தீர்வுப் பேச்சுவார்த்தைக்கான ஆரம்பப் புள்ளியாகக் கூட அமைய மாட்டாது என்பதே தமிழர்களின் நிலைப்பாடாகும். ஒற்றையாட்சி அரசுக்குட்பட்ட எந்தவொரு பேச்சுவார்த்தையிலும் தமிழர் தரப்புப் பங்குபற்றக் கூடாது.

3. தமிழர்களின் சுயநிர்ணய அலகானது, அவர்களின் தாயகமானது, ஒன்றிணைந்த (தற்போதைய) வடக்குகிழக்குமாகாணங்களை கொண்டதாக அமைய வேண்டும். குறித்த சுயநிர்ணய அலகிற்குள் முஸ்லீம் மக்களின் நியாயமான அரசியல் உரிமைகள் தொடர்பில் திறந்தமனதோடுதமிழ்த்தரப்புபேச்சுவார்த்தை நடாத்தத் தயாராக இருக்க வேண்டும். .

4. பாதுகாப்பு, நாணயக் கொள்கை உட்பட ஒரு சில விடயங்கள் மாத்திரமே மத்திய அரசின் அதிகார எல்லைக்குள் இருப்பதோடு எஞ்சிய அதிகாரங்கள் (சுநளனைரயட ஊழறநசள) மாநிலங்களிற்கு உரியவையாக அமைய வேண்டும். குறிப்பாக கல்வி, அரச காணி, சுகாதாரம், சட்டம் ஒழுங்கு, வரி இறுக்கும் அதிகாரம் ஆகியன நிச்சயமாக மாநிலங்களுக்கு உரிய அதிகாரங்களாக இருக்க வேண்டும் என்பது உள்ளிட்ட அடிப்படை விடயங்களை உள்ளடக்கி தமிழ் மக்கள் பேரவையால் தமிழ் மக்களின் கருத்துகளை உள்வாங்கி உருவாக்கப்பட்ட அரசியலமைப்பு முன்மொழிவைத் தமிழ் மக்கள் தமது அரசியல் நிலைப்பாடாக முன்வைக்க வேண்டும்.

5. தொடரும் இனவழிப்பின் ஒரு பகுதியாக போரின் போது தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட இனப்படுகொலைக்கு பன்னாட்டுகுற்றவியல்விசாரணையைதமிழ் மக்கள் வேண்டுவதோடு, உண்மையைக் கண்டறிதல்உள்ளிட்டஉள்ளகசெயன்முறைகள் மூலமாக பொறுப்புக்கூறலுக்கான முயற்சிகள் சாத்தியமற்றவை எனத் தமிழ் மக்கள் கருதுகின்றனர்.

6. 2009ல் ஆயுதப்போர் முடிவடைந்த பின்பும் வழமைபோன்றும், பல்வேறு புதிய வழிகளிலும்முன்னரிலும்விடமூர்க்கமாகவும் வேகமாகவும் தமிழ் மக்களின் மேலாகக் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பைச் சிறீ லங்கா அரசுகள் தொடர்வதைத் தடுத்து நிறுத்த சர்வதேச தலையீடும், சர்வதேச அனுசரணையுடன் கூடிய பொறிமுறையும் கட்டாயமானதும் அவசரமானதுமான தேவைகளாகும்.

7. தமிழ்தேசம்தமக்குரித்தானசுயநிர்ணய உரிமையின்பாற்பட்டு சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வழிமுறையான பொது வாக்கெடுப்பு (ஒப்பங் கோடல்) ஒன்றின் மூலம் தமது அரசியல் தெரிவை மேற்கொள்ளும் வகையில் ஐ.நா.வினால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு பொது வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டும் எனக் கோருகின்றனர்.

ஆனால், 13ஆம் திருத்தத்தை நிராகரித்து தேர்தல் விஞ்ஞாபனமானது தெளிவாக நிலைப்பாடு எடுக்கவில்லை என நாம் கருதுகிறோம். ஆயுத மோதல்களுக்குப் பின்னர் இனப்பிரச்சனைக்கான தீர்வைப் 13ம் திருத்தத்திற்குள் முடக்குவதை நோக்கமாகக் கொண்டு உரையாடல்கள் திட்டமிட்டுக் கட்டமைக்கப்பட்டு வருகின்றன. ஆனால் அனுபவ ரீதியாக மாகாண சபை முறையானது எவ்விதத்திலும் எமது நாளாந்த பிரச்சனைகளைக்கூடக் கையாள்வதற்குப் போதுமானதன்று என்பது எமது பட்டறிவு.

தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளிற் பெரும்பாலானவை ஒற்றையாட்சியை மறுப்பதாகத் தமிழ் மக்களுக்குச் சொன்னாலும், பிராந்திய மற்றும் பூகோள அரசியற் சக்திகளின் அழுத்தத்தின் காரணமாக நடைமுறையில் '13 அல்லது 13 பிளஸ்' என்ற வரையறைக்குள்ளேயே, அதாவது ஒற்றையாட்சி முறைமைக்கு உட்பட்டே, தமது நடைமுறை அரசியலைச் செய்து வருகின்றனர். இது தவறானது எனத் தமிழ் சிவில் சமூக அமையம் கடந்த 15 வருடங்களில் பல முறை சுட்டிக் காட்டியுள்ளது.

ஆனாலும் இன்று எமது தமிழ்ப் பொது வேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில், 13ம் திருத்தம் தொடர்பில் வெளிப்படையான நிராகரித்தல் அற்ற ஒரு மௌனத்தொனியே வெளிப்பட்டுள்ளது.தமிழ்ப்பொதுவேட்பாளரின் விஞ்ஞாபனம் ஒற்றையாட்சியை நிராகரிக்கின்றமையானது 13ஆவது திருத்தத்தை அரசியல் தீர்வுக்கான ஆரம்பப் புள்ளியாகக் கூட தமிழ் மக்கள் கருத முடியாது என்று கூறுவதாகவே அர்த்தம் கொள்ளப்பட வேண்டும் என நாம் கருதுகிறோம்.

தமிழ் சிவில் சமூக அமையம் தனது நிலைப்பாடுகளாகவும், விஞ்ஞாபனம் தொடர்பான விரிவான வாசிப்பாகவும், பகிர்ந்து கொண்டவற்றில், இத் தேர்தல் விஞ்ஞாபனம், சில விடயங்களை வெளிப்படையாகவும், சில விடயங்களைப் பூடகமாகவும் வெளிப்படுத்துகிறது. இதனால் மக்கள் மத்தியிலும் செயற்பாட்டாளர்கள் மத்தியிலும் சில குழப்பங்கள் ஏற்பட்டுள்ளதை நாம் அவதானிக்கிறோம்.

தமிழ் சிவில் சமூக அமையம் இந்நிலை தொடர்பில் ஆழ்ந்த கவலையும் கரிசனையும் கொள்கின்ற அதே வேளை தமிழ்ப் பொதுக் கட்டமைப்பு என்ற தமிழ்த் தேசிய அரசியல் முயற்சி வெற்றி பெற வேண்டும் என நாம் வலுவாக நம்புகின்றோம், விரும்புகின்றோம். இந்தப் புரிதலின் அடிப்படையிலேயே நாம் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்களிக்கக் கோருகின்றோம்.

இத்தகைய அணுகுமுறையில் இருந்து - வாசிப்பிலிருந்து எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் சங்குச் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு தமிழ் மக்களை நாம் வேண்டுகிறோம். தமிழ் அரசியல் நேர்மைப் பாதையில் தடம் பதிக்க நாம் உளச்சுத்தியுடன் தொடர்ந்து பயணிப்போம். தமிழ்ப் பொதுக் கட்டமைப்பு அத்தகைய பாதையில் செல்வதை உறுதி செய்ய எம்மாலான அனைத்தையும் நாம் தொடர்ந்து செய்வோம்.

2009இன் பின்னர் நடைபெற்ற மூன்று சனாதிபதித் தேர்தல்களிலும் தமிழ் மக்கள், தென்னிலங்கையின் பிரதான அரசியற் கட்சிகளைச் சேர்ந்த சிங்கள வேட்பாளருக்கே வாக்களித்தனர். எமது வாக்கைப் பெற்றவர்கள் தேர்தலில் வென்று பதவிக் கதிரை ஏறினாலும் அல்லது தோற்றாலும் ஒரு போதும் சிங்கள் பௌத்த பேரினவாத நிகழ்ச்சி நிரலிலிருந்து அவர்கள் வெளியேற வில்லை என்பதே எமது அனுபவமாகும்.

இந்நிலையில் இம்முறை இனவாதிகளான சிங்களவேட்பாளர்களுக்குவாக்களிப்பதைவிட தமிழ்மக்களின்அபிலாசைகளைதனதுதேர்தல் கோரிக்கைகளாக முன்வைத்துள்ள, தமிழ்ப் பொதுக்கட்டமைப்பால்முன்மொழியப்பட்டுள்ள திரு பா. அரியநேத்திரன் அவர்களுக்கு எமது வாக்குகளை வழங்கி எமது இலட்சிய உறுதியை வெளிப்படுத்துவோம் என தமிழ் மக்களைக் கோருகின்றோம்.

## மதுபோதையில் வாகனம் செலுத்திய இருவர் நானாட்டானில் மாட்டினர்

மன்னார்- முருங்கன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நானாட்டான் பிரதேசத்தில் மதுபானம் அருந்தி உந்துருளி செலுத்திய இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என முருங்கன் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் வெள்ளிக்கிழமை நானாட்டான்சுற்றுவட்டசந்தியில்இடம்பெற்றது.

கைது செய்யப்பட்டவர்களில் அரிப்பு துறை மற்றும் நானாட்டான் பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என்பதுடன் இருவரும் குடும்பஸ்தர்கள் எனத் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த முருங்கன் பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

(05)

## ஐஸ் போதைப்பொருளுடன் மூவர் கொழும்பில் கைது

கொழும்பு கிராண்ட்பாஸ், மட்டக்குளி மற்றும் வெல்லம்பிட்டி ஆகிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் ஐஸ் போதைப்பொருளுடன் மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனகொழும்புபொலிஸ்குற்றத்தடுப்புபிரிவினர் தெரிவித்துள்ளனர்.கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெல்லம்பிட்டி மற்றும் மட்டக்குளிய ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 25 முதல் 32 வயதுக்குட்பட்ட மூவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.சந்தேகநபர்களில் ஒருவரிடம் இருந்து 25 கிராம் 560 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும் மற்றைய இருவரிடமிருந்தும் 11 கிராம் 09 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 11 கிராம் 380 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொழும்பு பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.(05)



# ஐக்கிய அரபு இராச்சியத்தில் சட்டவிரோதமாக தங்கியுள்ள இலங்கையருக்கு தூதரக சேவை வழங்க விசேட ஏற்பாடு

சட்டவிரோதமாக தங்கியுள்ள இலங்கையர்களுக்கு தூதரக சேவைகளை வழங்க விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஐக்கிய அரபு இராச்சியத்திலுள்ள இலங்கை தூதரக அலுவலகம் அறிக்கை ஒன்றின் மூலம் அறிவித்துள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் அரசாங்கம் இரண்டு மாத பொது மன்னிப்பு திட்டத்தை 2024 செப்ரெம்பர் முதலாம் திகதி முதல் தொடங்கியுள்ளது.

இது தனிநபர்கள் தங்கள் விசா நிலையை சரிசெய்வதற்கு அல்லது அபராதம் அல்லது நுழைவுத் தடைகளை எதிர்கொள்ளாமல் தங்கள் சொந்த நாடுகளுக்குத்திரும்புவதற்கானவாய்ப்பைவழங்குகிறது.

அதன்படி, சாதாரண தூதரக சேவைகளுக்கு மேலதிகமாக, டுபாயிலுள்ள இலங்கை துணைத் தூதரகம் திங்கள் முதல் வெள்ளி வரை பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை திறந்திருக்கும், அபுதாபியிலுள்ள இலங்கை தூதரகம் ஆலோசனை ஆதரவு சேவைகளுக்காக திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.00 மணி முதல் அதிகாலை 5.00 மணி வரை திறந்திருக்கும்.

இப்பொது மன்னிப்பு காலப்பகுதியில் இலங்கையிலிருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தற்காலிக பயண ஆவணங்களை இலங்கையிடம் கோருவரென எதிர்பார்க்கப்படுவதாக டுபாயிலுள்ள இலங்கை துணைத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது மன்னிப்புக் காலத்தின் போது, ஐக்கிய அரபு இராச்சியத்தில் சட்டவிரோதமாக தங்கியுள்ள இலங்கையர், உரிய வீசாவை சட்டரீதியாக தயார் செய்யுமாறு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அவர்களைக் கோரியுள்ளது. அவர்கள் சட்டவிரோதமாகதங்கியிருந்தால், தமக்கு அறிவிக்குமாறு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மேலும், டுபாய் மற்றும் வடக்கு ஐக்கிய அரபு இராச்சியத்தில் உள்ள அனைத்து இலங்கையர்களின் நலனை உறுதி செய்வதில் துணைத் தூதரகம் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும், இந்த பொது மன்னிப்புக் காலத்தில் தேவையான ஒத்துழைப்புகளையும் சேவைகளையும் தொடர்ந்து வழங்குவதாகவும் அது கூறியுள்ளது.

(05)

# 35,000 போதை மாத்திரைகள் சேரக்குளி கரையோரம் மீட்பு

புத்தளம் - சேரக்குளி கடற்பிரதேசத்தின் காட்டுப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 35,000 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த போதை மாத்திரைகளை வெள்ளிக்கிழமை கடற்படையினர் மீட்டுள்ளனர்.

கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின்போதுகடற்கரையோரத்தில்புதர்களுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகத்திற்கிடமான இரண்டு பெட்டிகளில் 35,470 போதை மாத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட போதை மாத்திரைகள் கடல் வழியாக நாட்டுக்குள் கடத்தப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

மீட்கப்பட்ட மருந்து மாத்திரைகள் சட்ட நடவடிக்கைகளுக்காக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படும் வரை கடற்படையினரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.

இவ் ஆண்டு இதுவரையான காலப்பகுதியில் 13,6798 போதை மாத்திரைகளை கடற்படையினர் மீட்டுள்ளனர்.

(05)

# கல்வி அமைச்சர் சுசில் வன்னியில் ரணிலின் பரப்புரைப் பணிகளில்



ஜனாதிபதி வேட்பாளரும், தற்போதைய ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் பிரசாரத்தை முன்னெடுப்பது தொடர்பில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

வவுனியா, ஹொரவப் பொத்தானை வீதியில் உள்ள விருந்தினர் விடுதியில் வெள்ளிக்கிழமை குறித்த கலந்துரையாடல்இடம்பெற்றது.

ஜனாதிபதி தேர்தல் நாடு முழுவதும் சூடு பிடித்துள்ள நிலையில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வெல்ல வைக்க வன்னித் தேர்தல் தொகுதியில் உள்ள வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக இதில் ஆராயப்பட்டதுடன், பொறுப்புக்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுடன் இராஜாங்க அமைச்சர்களான கே.கே.மஸ்தான், சுரேன் ராகவன், நாடாளுமன்ற உறுப்பினரான கு. திலீபன் மற்றும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் கட்சிகளின் ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.(05-100)













# வெடிபொருள்களுடன் இரண்டு பேர் கைது

## தம்புள்ளையில் சம்பவம்

தம்புள்ளை நகரத்தில் வெடிபொருள்களுடன்இரண்டுசந்தேகநபர்கள் வெள்ளிக்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்எனதம்புள்ளை பொலிஸார் தெரிவித்தனர்.

தம்புள்ளை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்டசுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரிமற்றும்பிலியந்தலை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 29 மற்றும் 43 வயதுடைய இரண்டு நபர்களேகைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து டைனமைட் வெடி மருந்து ஒன்று , 500 கிராம் அமோனியம் மற்றும் 15 டெட்டனேட்டர்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்புள்ளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# துப்பாக்கி, தோட்டாக்களுடன் இரத்கமவில் ஒருவர் கைது

இரத்கம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கபுமுல்ல வீதிப் பகுதியில் உள்நாட்டு துப்பாக்கி மற்றும் தோட்டாக்களுடன் சந்தேக நபர் ஒருவர் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் இரத்கம பிரதேசத்தை சேர்ந்த 40 வயதுடையவர் ஆவார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து உள்நாட்டு துப்பாக்கி மற்றும் 05 தோட்டாக்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# மாணவனின் வீட்டிலிருந்து தோட்டாக்கள் கண்டுபிடிப்பு

அநுராதபுரம், கலென்பிந்துனுவெள பிரதேசத்தில் பாடசாலை மாணவன் ஒருவனின்வீட்டிலிருந்துதோட்டாக்கள் கைப்பற்றப் பட்டுள்ளதாக கலென்பிந்துனுவெள பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பில்தெரியவருவதாவது -

கலென்பிந்துனுவெள பிரதேசத்தில்உள்ளபாடசாலை ஒன்றில் 6 ஆம் வகுப்பில் கல்வி கற்கும் மாணவன் ஒருவன் துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படும் ரி-56 ரக தோட்டாக்களை வைத்திருந்ததை அவதானித்த ஆசிரியர் ஒருவர் இது தொடர்பில் பாடசாலை அதிபருக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து, பாடசாலை அதிபர் இது தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

பின்னர், பொலிஸ் குழு ஒன்று இந்த மாணவனின் வீட்டிற்குச் சென்று சோதனையிட்டபோதுவீட்டில் உள்ள அலுமாரியில் இருந்து ரி-56 ரக துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படும் 17 தோட்டாக்கள், கைத்துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படும் 10 தோட்டாக்கள் மற்றும் ரிவோல்வர் ரக துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படும் 01 தோட்டா என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது, இந்த வீட்டில் மாணவனின் தாய் மாத்திரமே இருந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கலென்பிந்துனுவெள பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# தெற்கின் தேர்தல் வெற்றிதினம் என்பது தமிழர்களுக்கு இன்னும் ஒரு கரி நாள் என்பதை வெளிப்படுத்துவோம்

## அருட்தந்தை மா.சத்திவேல் காட்டத்துடன் தெரிவிப்பு



தெற்கின் தேர்தல் வெற்றி தினம் என்பது தமிழர்களுக்கு இன்னும் ஒரு கரி நாள் என்பதை வெளிப்படுத்துவோம். அதுவே எமக்கான தேர்தல் வெற்றியாக அமையட்டும் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால்சனிக்கிழமைவெளியிட்டுள்ளஊடகஅறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில்சமூக,பொருளாதார,அரசியல்மாற்றத்திற்கான சக்தியாகதம்மை அடையாளப்படுத்தும் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திசநாயக்க அண்மையில் யாழில் நடத்திய ஜனாதிபதி தேர்தல் வாக்கு வேட்டை பிரச்சாரக் கூட்டம் ஒன்றில் மக்களின் அபிலாசைகள் என தான் நினைத்ததை மட்டும் காட்டி பேசியதோடு மாற்றத்திற்கான தெற்கின் மக்களோடு இணைந்து வடக்கு கிழக்கு தமிழர்களும் தமக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை மறைமுகமாக அச்சுறுத்தும் தொனியில் பேசியது அரசியல் அநாகரீகமாகும்.

தமிழர்களின் ஜனநாயக உரிமைக்கு எதிரானதும் இன அழிப்பின் முகம் கொண்டதுமான வார்த்தைகளாகும். இதனை வன்மையாக கண்டிப்பதோடு வடகிழக்கு தாயக மக்கள் பேரினவாத கருத்தியல் கொண்ட இன அழிப்பு ஜனாதிபதி வேட்பாளர்களை ஆதரிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்வதோடு இவர்களின் வெற்றி தினத்தினை தமிழ் தேசமெங்கும் இன்னுமொரு ஒரு கரி நாளாக வெளிப்படுத்த வேண்டும்.

அநுரகுமார தமது உரையில் எந்த பாதையை தேர்ந்தெடுக்க, வேண்டும் யாருக்கு வாக்களிக்க வேண்டும், யாருக்கு வாக்களிக்க கூடாது என்பதை மறைமுக அச்சுறுத்தும் பாணியில் கூறியதோடு மாற்றத்தை விரும்பும் தெற்கு மக்களோடு இணைய வேண்டும் என்று அழுத்தமாகவும் குறிப்பிட்டார். அவ்வாறு வாக்களிக்காவிட்டால் தமிழ் மக்கள் அனுபவிக்க நேரிடும் என்பதையும் நாசுக்காக வெளியிட்டார். இது அவர்களின் 1988ஃ89 கால நாகரிகத்தை காட்டி நிற்கின்றது.

வடகிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தை துண்டாடிபேரினவாதத்தின்வரலாற்றுபெருமையை தமதாக்கிக் கொண்டவர்கள் இவர்கள். அவர் அந்த பிரிப்பு நிலையில் நின்று நாட்டின் பிரச்சினையை வடக்கு,கிழக்கு, தெற்கு என ஒன்றாகக்கூடி பேசித்தீர்ப்போம் என தனது உரையில் குறிப்பிட்டார். வடகிழக்கை இனி இணைய விடமாட்டோம் என் நிலைப்பாட்டின் தொனியாகும். இதுவே அவர்கள் அரசியல் கலாச்சாரம். இத்தகைய கலாச்சாரத்தோடா தமிழர்களை ஒன்று சேர அழைப்பு கொடுக்கின்றார்கள்?

யாழின் கூட்டத்தில் மகிந்த, ரணில் மைத்திரி போன்றோரும் அவர்களின் சகாக்களும் புரிந்த பொருளாதார குற்றங்களுக்கும், நாட்டின் பொது சொத்தினை கொள்ளையடித்தமைக்கும் தண்டனை கொடுப்போம் என்று கூறியவர் தமிழர்களுக்கு எதிராக சிங்கள பௌத்த பேரினவாத அரசு படையினர் புரிந்த யுத்தக் குற்றங்களை மறைத்து யுத்தத்திற்கு முகம் கொடுக்காத மக்கள் முன் நிற்பதைக் போல் நின்றார்.

இதே அநுர குமார அண்மையில் இன்னுமொரு தேர்தல் பிரச்சாரத்தின் போது 'நாம் ஆட்சிக்கு வந்தால் யுத்த குற்றவாளிகள் என அடையாளப்படுத்துவோரை தண்டிக்க மாட்டோம்' எனக் கூறியது மகிந்த, கோத்தா, மைத்திரி, ரணில் வரிசையில் நின்று இனப்படுகொலை யுத்த குற்றங்களுக்கும் தமிழர்கள் எதிர்பார்க்கும் நீதி தன்னுடைய ஆட்சியில் இல்லை என்பதை வெளிப்படையாகவே கூறியிருக்கின்றார்.

உயிர்ப்பு தின (2019) குண்டுத்தாக்குதல்களுக்கு காரணமானோரை கண்டுபிடித்து தண்டிப்போம் என்று தெற்கில் வாக்கு கேட்பவர்கள் வடக்கிலே 30 வருட காலமாக அப்பாவிகளை கொலை செய்தவர்களை, விஷக் குண்டுகளை மக்கள் மீது பொழிந்தவர்களை, பல்லாயிரக்கணக்கானோர் காணாமலாக்கபட்டமைக்கு காரணமானவர்களை வெளிப்படுத்தமாட்டோம் என தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமையின் உண்மையை மறைத்து தன்னுடைய அரசியலுக்காக தெற்கில் ஒரு பகுதியினருக்கு எதிராக நடாத்தப்பட்ட தாக்குதலின் உண்மை தன்மையை வெளிப்படுத்துவோம் என கூறுவது அரசியல் வெட்கச் செயலாகும்.

அண்மையில் அநுரகுமார யாழில் நடத்திய கூட்டத்தில் மட்டுமல்ல வெறும் பிரதான வேட்பாளர்கள் வடக்கு கிழக்கில் நடத்திய எந்த ஒரு வாக்கு வேட்டை கூட்டத்திலும் இராணுவம் ஆக்கிரமித்துள்ள தமிழர்களின் நிலங்கள் மற்றும் சிங்கள பௌத்த தொல்லியல் திணைக்களத்தின் சிங்கள பௌத்த மயமாக்கல், சிங்கள பௌத்த குடியேற்றங்கள், தனியார் காணிகளில் புத்தர் சிலைகளை வைத்தல், அடாத்தாக விகாரைகளை கட்டுதல் போன்றவற்றிற்கு வருத்தமோ தடுத்து நிறுத்துவதாகவோ கருத்து கூற மறுத்துள்ளமை அவையெல்லாம் தமது காலத்திலும் தொடரும் என்பதையே உணர்த்துகிறது. இதுவும் ஒருவகையில் யுத்த பிரகடனமே.

பேரினவாத ஜனாதிபதி வேட்பாளர்கள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிக் கதிரையை தமதாக்க தமிழர்களை வெறும் கறிவேப்பிலையாகவும் ரம்பையாகவும் பாவித்து விட்டு தூக்கி எறியவே முற்படுகின்றனர்.சுயநல அரசியலுக்கு தம்மை இரையாக்கிக்கொண்ட தமிழ் தேசிய அரியதரம் பூசிக்கொண்ட தமிழ் அரசியல் தரப்பினரும் தேர்தல் அரசியல் களத்தில் நின்று தமிழர்களை பலி கொடுக்கும் அரசியலை முன்னகர்த்துகின்றனர்.

சமாதானப்படையாக தமிழர் தாயகத்தில் காலடி வைத்த இந்திய இராணுவத்தையும், இந்தியாவின் முகத்தையும் இதற்கு அவர்கள் யார் என்பதையும் உலகிற்கு வெளிக்காட்டிய தியாகி திலீபனின் உயிர்தியாக மாதம் இதுவாகும். அவரின் உண்ணாவிரத போராட்டம் எமது அரசியலுக்கும் தேசியம் காக்கும் செயற்பாட்டுக்கும் உந்து சக்தியாக இருப்பதோடு எதிராளிகளில்முகத்திரையைகிழிக்கதேசமாகஒன்றுசேர்வோம். தெற்கின் தேர்தல் வெற்றி தினம் என்பது தமிழர்களுக்கு இன்னும் ஒரு கரி நாள் என்பதை வெளிப்படுத்துவோம். அதுவே எமக்கான தேர்தல் வெற்றியாக அமையட்டும். - என்றுள்ளது.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.09.2024இல் வெளியிடப்பெற்றது